# வலம்புரி

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 27 புதன்கிழமை (13.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 329




## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள அச்சகத்துக்கு பெண் வேலையாட்கள் தேவை.
(புத்தககம் கட்டுநர்) (Binding) பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**0212229468/0767693903**

(948)


## கருத்துரைத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம் D பிரிவு வழங்கும் கருத்துரைத் தொடர் 01,2019 மரபுரிமையை வலுவூட்டுவதலுக்கான அறிவு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விழா வாயில் மீதான விவாதங்கள் எனும் தலைப்பில் நாளை வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு இல.2 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப் பீடம் நுண்கலைத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பா.அகிலன் வழங்கவுள்ளார். (ம-3)


## பதவி வெற்றிடம்

**திட்டமுகாமையாளர்**
**களப் பணியாளர்கள்**
**ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர்**

ஆகிய பதவிகளுக்கு குறைந்தது 5 வருட அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பங்களை அனுப்பலாம்.

மின்னஞ்சல் - sesnthu@eureka.lk
முடிவுத்திகதி - 25.11.2019

(947)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி **யோ.திரவியநாதன்** அவர்களின் அன்புச் சகோதரி

**அமரர் நாகேஸ்வரி லோகநாதன்**



கடந்த (25.10.2019) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

(C-8214)

தேர்தல் தொடர்பில்

## வெளிநாட்டு ஊடகங்கள் அவதானம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வெளிநாட்டு ஊடகங்கள் அவதானம் செலுத்தியுள்ளன.

ரொய்ட்டர்ஸ் மற்றும் த ஹிந்து முதலான செய்திச் சேவைகளின் இணையதளங்களில் வெளியிடப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறக்கூடிய வாய்ப்பைக் கொண்டுள்ள பிரபலமான வேட்பாளர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக தோழர் **சி.சிவரூபன்** (கிளை முகாமையாளர் - நல்லூர் ப.நோ. கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் தந்தையார்

அமரர் **கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்**

அவர்களின் இறப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்**
**கிளை - நல்லூர் ப.நோ.கூ.சங்கம்**

(954)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 15 - 03 - 1948



மறைவு 11 - 11 - 2019

எமது நண்பன் **க.நவரூபன்** அவர்களின் பாசமிகு தாயார்

**கதிர்காமத்தம்பி நாகேஸ்வரி**

**(ஓய்வுபெற்ற நெசவு போதனா ஆசிரியை)**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

**11வது அணி**
**விவசாய பீட** (Agros) **நண்பர்கள்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

(C-8210)


## வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 554A எனும் இலக்கத்தை உடைய கடை வாடகைக்கு உண்டு.
நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு :
**077 854 9383**

(279)



## றொமானியா வேலைவாய்ப்பு

பாரிய வீதிக் கட்டமைப்பு வேலைத்திட்டத்தில்
30 பணிநிலைகளுக்கு 280 வெற்றிடங்கள்

உணவு, தங்குமிடம் மருத்துவ வசதிகள் **இலவசம்!**
சம்பளம் 600 - 1,100 US$ 99,500 - 199,100

விசா - டிக்கட் கிடைத்த பின்னரே கட்டண அறவீடு!
3 அணிகள் பயணமாகின! அடுத்த அணியில் நீங்களும் இணைய...

**Emerald Isle**
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists

077 00 38 215
077 55 46 956
021 221 9 221

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lovers/Tean Girlsக்கு அருகே)
License No. 2268 www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk



150க்கும் மேற்பட்டவர்களுக்கு உள்நாட்டு - வெளிநாட்டு வேலைவாய்ப்பு விசா வழங்கி சாதனை படைத்த

**SIKARAM ACADEMY இன்**

10வது ஆண்டு நிறைவையொட்டி
**3 - 6 மாதத்தில்**



Switzerland
New Zealand
Australia
Canada

Student Visa
Work Visa - மற்றும்
German உல்லாசப் பயணக்கப்பல்
வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடனான

TVEC & UK Certified
**Tourism & Hospitality Management**
ஹொட்டேல் கற்கைநெறி with

3ஏ மாதத்தில் ஆங்கிலத்தில் சரளமாக பேச
FREE **ENGLISH** அடிப்படையிலிருந்து IELTS வரையில்

No.1 Award Winning Institute of the North
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017

021 221 9 221
077 3616 798
SIKARAM ACADEMY

221-1/1, மின்சார நிலைய வீதி
(2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம். இஷாரா ரெக்ஸ் - றீன் கேர்ல் அருகே

(C-8211)


## கால்நடை ஏல விற்பனை

பூநகரி கமநல சேவை நிலைய அதிகாரப் பிரிவுக்கு உட்பட்ட சாமிப்புலம் கமக்கார அமைப்பு பிரிவில் கட்டாக்காலியாக நெற்பயிர்களை சேதம் செய்த வகையில் 2019.10.24ஆம் திகதி அன்று பிடிக்கப்பட்ட "Su" குறி உடைய நெற்றிச்சுட்டி ஊர் இன சிவப்பு நிற பசுமாடு இதுவரை எவராலும் உரிமை கோரப்படாமையால் எதிர்வரும் 2019.11.19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் சாமிப்புலம் கமக்கார அமைப்பு பொது மண்டபத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. ஏலம் எடுக்க விரும்புவர்கள் குறித்த தினத்தில் பணத்தினை உடனடியாகச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று மாட்டினை வாங்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**கமநல சேவை நிலையம், பூநகரி**

(950)

## மரண அறிவித்தல்



**திருமதி ராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை**

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை அவர்கள் 11.11.2019 திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் எஸ்.கணபதிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) பாசமிகு மனைவியும் சசிதரி (வைத்தியகலாநிதி), நவிதரன் (கணக்காளர்), சிவதரி (ஆசிரியை - கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி இரத்தினபூபதி, விவேகானந்தன், சிவசுப்பிரமணியம், கணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஈசன் (பொறியியலாளர்), லாவண்யா, பேராசிரியர் ஸ்ரீபிரசாந்தன் (பேராதனைப் பல்கலைக்கழகம், அமைப்பாளர் - அகில இலங்கை கம்பன் கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆதிஸ், அருண், சாய்ஆரதி, அதிகன், அநகன், கவின்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசையில் அமைந்துள்ள மகிந்த மலர்ச்சாலையில் இன்று (13.11.2019) புதன்கிழமை காலை 7.30 மணி முதல் பார்வைக்காக வைக்கப்பட்டு பிற்பகல் ஒரு மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

(C-8215)

விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 27 புதன்கிழமை (13.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 329

## வடக்கு - தமிழ் நாட்டுக்கிடையிலான புரிந்துணர்வு கட்டியெழுப்பப்படும்



### ஸ்ராலின் சந்திப்புக் குறித்து ஆளுநர் ராகவன் தெரிவிப்பு

(சென்னை)

சென்னைக்கு இரண்டுநாள் விஜயம் மேற்கொண்டுள்ள வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் தி.மு.க தலைவரும் தமிழ்நாடு சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்ராலின் அவர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் சென்னையில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது ஆளுநர் இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையிலும். வட 23

### கோத்தா ஜனாதிபதியானால்

## வெள்ளைவான் கலாசாரத்தை கைவிட மாட்டார் - ரணில்

(குருணாகல்)

கோத்தபாய ஜனாதிபதியானால் வெள்ளைவான் கலாசாரத்தைக் கைவிடமாட்டார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். குருணாகல் குளியாபிட்டிய நகரில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

எமது எதிர்வேட்பாளரான கோத்தபாய ராஜபக்ஷ புத்த தர்மத்தை எவ்வாறு போஷிக்கப்போகின்றார் என்பதை அவரது தேர் 23


### எமது உரிமைகளைப் பெறுவதற்கு

# கோத்தாவிடம் மண்டியிட்டு பிச்சை எடுக்க முடியாது

### திருமலையில் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(திருகோணமலை)

கோத்தபாய கடந்த காலங்களில் ஒரு சர்வாதிகாரியாக செயற்பட்டு எமது மக்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தினார். நாம் நீண்ட காலமாக போராட்டம் நடத்தி வருவது எமது உரிமைக்காக, அதனை விடுத்து கோத்தபாயவிடம் மண்டியிட்டு பிச்சை எடுக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)



## பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைவைக்கமாட்டேன் சஜித் உறுதி

(நீர் கொழும்பு)

தாம் ஆட்சிக்கு வந்தால் எந்தவொரு சூழ்நிலையிலும், பயங்கரவாத தடைச்சட்டத்தில் எந்தவொரு மாற்றத்தையும் செய்யப் போவதில்லை என்று, புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நீர் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதற்கு, பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார்.

அங்கு உரையாற்றிய அவர், எந்தவொரு சூழ்நிலையிலும், நான் பயங்க்ரவாத தடைச்சட்டத்தில் எந்த மாற்றத்தை 23

### காலி கராப்பிட்டியில்

## துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

காலி - கராப்பிட்டிய பகுதியில் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கராப்பிடிய பிரதேசத்தில் தப் 23

### அசம்பாவிதங்கள் நடக்க வாய்ப்பு

## தென்னிலங்கையில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இன்றைய தினம் பிரசார கூட்டங்கள் இடம்பெறும் அனைத்து பிரதேசங்களுக்கும் தீவிர பாதுகாப்பு வழங்குவதற்கு பாதுகாப்புப் 23

### மன்னார் முத்தரிப்புத்துறை கடலில்

## படகின் கம்பி குத்தியதில் இளம் குடும்பஸ்தர் பலி

(மன்னார்)



மன்னார் முத்தரிப்புத்துறை கடலில் பழுதடைந்த படகின் வெளி இணைப்பு இயந்திரத்தைத் திருத்த முற்பட்ட இளம் குடும்பஸ்தர் இயந்திரத்தின் கூரிய கம்பி கழுத்தில் குத்தி உயிரிழந்த சம் 23

### எம்மைத் தோற்கடித்து

## கூட்டமைப்பு என்ன செய்தது

### கல்முனையில் பசில்

(கல்முனை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2015ம் ஆண்டு எங்களை தோற்கடித்து தமிழ் மக்களுக்கு என்ன செய்தார்கள். தங்களது பைகளை நிரப்பி கொண்டதை 23

## ராஜபக்ஷ என்றால் வடக்கில் தமிழர்களுக்கு ஒருவிதமான பயப்பீதி ஏற்படுகின்றது

### வல்வை மண்ணில் தயாசிறி ஜயசேகர

(கரணவாய்)

ராஜபக்ஷ என்றால் வடக்கில் தமிழர்களுக்கு ஒரு விதமான பயப்பீதி ஏற்படுகின்றது என வல்வை மண்ணில் வைத்து தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர பொது ஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு ஆதரவை தெரிவித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரசார கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறையில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பிரதேசம் ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகும். உங்களுடைய வீரன் வேலுப்பிள்ளை பிரபாகரன் 23

## கிளிநொச்சி முழங்காவிலில் 104 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - முழங்காவில், பல்லவராயன் கட்டு பகுதியில் 104 கிலோ கேரள கஞ்சா பொதிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து சென்ற விசேட போதை ஒழிப்பு பிரிவினரால் சோதனை மேற்கொள்ளப்பட்ட போதே கஞ்சா பொதிகள் 23

## கிளிநொச்சியில் மோ.சைக்கிளுடன் கப் வாகனம் மோதி விபத்து

### குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி முறிப்பு பகுதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்ற குறித்த விபத்தில் பரந்தன் பகுதியை சேர்ந்த 34 வயதான இராசரத்தினம் சந்திரகுமார் என்ற 23

# அங்கஜனிடம் கேள்வி பதில்...



**கேள்வி :**

**1. தமிழர்கள் இறுதியுத்தக் குற்றச்சாட்டுள்ள கோட்டாபயவிற்கு வாக்களித்தால் தமிழர்களை சர்வதேச நாடுகள் முன்னுக்குப் பின் முரணாக நடப்பவர்களாக கருதமாட்டார்களா?**

**பதில் :** இறுதி யுத்தத்தில் ஈடுபட்ட எத்தரப்பாயினும் சர்வதேச நியமங்களை மீறி போர்குற்றம் இழைத்ததாக உறுதி செய்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும் இவ்வாறான நிலையில் முன்னால் இராணுவத் தளபதியான சரத்பொன்சேகா தானே யுத்தத்தை முன்னின்று நடத்தினேன் எனப் பகிரங்கமாக கூறிவருகிறார் இவரையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலங்களில் ஜனாதிபதி வேட்பாளராக ஆதரிக்குமாறு தமிழர் களிடம் கூறியபோது 7 மாதத்தில் 70 வீதமான மக்கள் ஆதரவு வழங்கினார்கள் இந் நிலையில் கோட்டாபயவை தமிழர்கள் ஆதரிப்பதில் தவறில்லை.

**கேள்வி :**

**2. நீங்கள் 2010ம் ஆண்டிற்கு பின்னர் அரசியலுக்கு வந்தீர்கள் இதற்க்கு முன்னும் பின்னும் நடந்த வெள்ளை வான் கடத்தலைப்பற்றி என்ன சொல்ல போறீர்கள் ?**

**பதில் :** கடத்தல்கள் நடந்திருக்கலாம் நடக்காமல் இருந்திருக்கலாம் பொலிஸ் விசாரணையே உறுதிப்படுத்த வேண்டும்.மகிந்த ராஜப்பக்ஷ காலத்தில் இடம் பெற்ற அநீதிகளுக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கத்தை அமைத் தோம் என கூறியவர்கள் என்ன செய்தார்கள். தேர்தல் நெருங்கும் போது வெள்ளைவானையும் கோட்டாவை யும் தொடர்புபடுத்துவது அரசியல் குரோதமாகும்.

**கேள்வி :**

**3. அரசியல் அமைப்பிற்கு முரணான மகிந்த ராஜபக்ஷவை நாட்டின் ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன பிரதமராக்கியதிற்க்கு நாட்டு மக்களிடம் ஏன் மன்னிப்பு கோரவில்லை ?**

**பதில் :** நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் புதிய யுகம் ஒன்றிற்காகவே மைத்திரி பாலசிறிசேன பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டு ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். இந்நிலையில் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட ரணில்விக்கிரமசிங்கவின் சகாக்கள் மத்திய வங்கியில் ஏறக்குறைய 1100 கோடி ரூபாவை மோசடி செய்தனர் இதனையும் ஏனைய சில காரணிகளையும் கருத்தில் கொண்டு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காகவே மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கினார்.

**கேள்வி :**

**4. ஐ.தே.க தமிழ்மக்களுக்கு உருப்படியாக ஏதும் செய்யாத நிலையில் இறந்த உறவுகளை தங்கு தடையின்றி அஞ்சலி செலுத்த அனுமதித்தனர் ஆனால் கோட்டாபய தான் ஆட்சிக்கு வந்தால் அனுமதிக்க மாட்டேன் என கூறியதாக பன்னாட்டு ஊடகம் தெரிவித்ததாக யாழ்ப்பாண பத்திரிக்கை ஒன்றில் செய்தி வந்ததே ?**

**பதில் :** கோட்டாபய ராஜபக்ஷ இறந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த மறுப்பதாக தான் ஒருபோதும் ஊடகங்களுக்கு தெரிவிக்கவில்லை என அன்றைய தினமே முகநூல்வாயிலாக மறுத்திருந்தார் இது ஒருபுறமிருக்க அண்மை யில் யாழ் பருத்தித்துறை பிரசார கூட்டத்தில் கலந்து கொண்ட மகிந்த ராஜக்ஷவின் புதல்வர்களில் ஒருவரான நாமல் ராஜபக்ஷ மாவீரர் நாளை முன்னைய காலங்களை விட சிறப்பாக கொண்டாட வழியமைப்பேன் என பகிரங்கமாக கூறினார்.



**கேள்வி :**

**5. தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுகாதரனை ஏன் மைத்திரிபால சிறிசேன விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை? அதற்கு நீங்கள் அழுத்தம் கொடுக்கவில்லையா?**

**பதில் :** அவரின் விடுதலை தொடர்பில் என்னாலான முன்னெடுப்புக்களை செய்து வருகிறேன். இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளருடன் கலந்துரையாடி தீர்க்கமான முடிவை எடுப்பதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.



**பதில்கள் தொடரும்...**

**உங்கள்**

**அங்கஜன் இராமநாதன்**

ගෝඨාභය රාජපක්ෂ
கோட்டாபய ராஜபக்ஷ
Gotabaya Rajapaksa
X

**என் அன்பான நாட்டு மக்களே,**

**உங்கள் உரிமையைப் பயன்படுத்த நீங்கள் தயாராகும் போது, பாதுகாப்பான, அமைதியான மற்றும் செழிப்பான ஒரு தேசத்தை உருவாக்குவதற்கான எனது வாக்குறுதியை நிறைவேற்றும் திறனுடனும், உத்வேகத்துடனும் நான் முன்நிற்கிறேன்.**

- ஆரம்பத்தில் இருந்தே, நான் கொள்கை சார்ந்த பிரச்சாரத்தை மேற்கொண்டேன். கடந்த சில வாரங்களாக என்னிடமிருந்தும் எனது குழுவினரிடமிருந்தும் நீங்கள் கேள்விப்பட்ட யோசனைகள் மற்றும் திட்டங்கள் கடந்த நான்கரை ஆண்டுகளாக வல்லுனர்கள் மற்றும் நிபுணர்களின் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகளின் ஆழமான உள்ளீடுகள் ஆகும்.

- இந்தத் தேர்தலுக்கான எனது பயணம் மிக உயர்ந்த மட்டங்களிலிருந்து சவால்களை எதிர்கொண்டது. இவை அனைத்தையும் நான் வெற்றிகரமாக சமாளித்தேன். பல நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும் அமெரிக்க குடியுரிமையை நான் கைவிட்டதில் இடைவிடாத குற்றச்சாட்டுகள் சேறுபூசல் மற்றும் தனிப்பட்ட தாக்குதல்களுக்கு மத்தியில் குடியுரிமை பற்றிய உங்களுடன் எனது உரையாடலில் உண்மையாகவிருக்கிறேன். நான் எனது சொந்த இயல்புக்கும் பாணிக்கும் உண்மையாகவே இருக்கிறேன்.

> *இன்று நாம் காணும் அரசியல் கலாச்சாரத்தை நான் மாற்றினேன் என்பது எனது மரபாக இருக்கும் என விரும்புகிறேன். தடையற்ற அதிகாரம், ஊழல் மற்றும் தண்டனையற்றதன்மை ஆகியவற்றை விட ஒரு பொறுப்பான, பொறுப்புணர்விற்கு முன்னுரிமை வழங்கும் திறமையான அரசியல் கலாச்சாரத்திற்கு நாம் மாறுவது முக்கியம்.*

- யாரும் பின்தங்கிவிட மாட்டார்கள் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன் இனம், மதம், பாலினம் மற்றும் புவியியல் போன்ற வேறுபாடுகள் யாரையும் ஓரங்கட்டாத, ஒரு உள்ளடக்கிய தேசத்தை வழிநடத்துவதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். இலங்கையின் புதிய தலைமுறையினர் உலகளாவிய குடிமக்களாக மாறுவதற்கான சரியான வாய்ப்புகளை உருவாக்க விரும்புகிறேன், மேலும் எனது ஆட்சிக் காலத்தில், எடுக்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கையும் முடிவும் இலங்கையை சாதனைக்கான புதிய பார்வைக்குத் தள்ளும் நலன்களை கொண்டதாக மாற்றுவதாக இருக்கும்.



**உங்களையும் எங்கள் தேசத்துக்கும் பொறுப்பேற்க நான் தயாராக நிற்கிறேன். புதிய இலங்கைக்கான இந்த பயணத்தில் என்னுடன் இணையுங்கள்.**

**கோட்டாபய ராஜபக்ஷ**

*2019 நவம்பர் 13*

ගෝඨාභය රාජපක්ෂ
கோட்டாபய ராஜபக்ஷ
Gotabaya Rajapaksa

தேசத்திற்குப் பொறுப்பு கூறும்

# கோட்டாபய

# தமிழர் பிரச்சினை தொடர்பில் வாய் திறக்காத சஜித்

# கூடத் திரியும் கூத்தாடிகள் பிரச்சினைக்குத் தீர்வு தருவோம் என்கிறார்கள்

## வேடிக்கை என்கிறார் அங்கஜன்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத்திலும் வெளி இடங்களிலும் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் வாய் திறக்காத சஜித் பிரேமதாஸ மூலம் தீர்வைப் பெற்றுத் தருவோம் என அவருக்கு ஆதரவு வழங்கும் தமிழ் கூத்தாடிகள் மக்களை ஏமாற்றுவது வேடிக்கையாக உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் இனப் பிரச்சினை மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இதுவரை காலமும் அமைச்சராக இருக்கும் சஜித் பிரேமதாஸவால் பாராளுமன்றத்திலும் வெளி இடங்களிலும் பேச முடியவில்லை.


அதுமட்டுமல்லாது கடந்த ஏப்ரல் மாதம் இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் தொடர்பிலும் பாராளுமன்றத்தில் மௌனமாகவே இரு ந்தார்.

ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய நிலையில் சஜித்துக்கு ஆதரவுக் கரம் நீட்டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட ஆதரவு தெரிவிக்கும் கட்சிகள் சஜித்தை செயல் வீரனாக மக்கள் முன் காட்ட முயற்சிக்கின்றன.

யாழ்ப்பாணத்திற்கு தேர்தல் பரப்புரைக்காக வருகை தந்த ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பேன், மாகாண சபை மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு தருவேன் என வாக்குறுதியை வழங்கும் நிலையில் சஜித் பிரேமதாஸவால் அந்த வாக்குறுதிகளை வழங்க முடியாது போனது ஏன்?

யாழ். மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணிக்கப்படும் வீட்டுத் திட்டங்களுக்கான நிதி கூட முழுமையாகக் கிடைக்காத நிலையில் குறித்த அதிகார சபைக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சர் சஜித் தனது தேர்தல் பரப்புரைக்காக பல கோடி ரூபாய்களை செலவு செய்கிறார்.

வீட்டுத் திட்டங்களைப் பெற்ற மக்கள் போதிய நிதி கிடைக்காமையால் கடன் சுமையுடன் வாழும் நிலையில் ஆடம்பரப் பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் சஜித் பிரேமதாஸ மக்களின் நிலை அறியா தவராகச் செயற்படுகிறார்.



இவ்வாறான நிலையில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லக் கூடிய முதுகெலும்புள்ள தலைவரே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

எனவே தமிழ் மக்கள் தமது எதிர்காலத்தை வளப்படுத்தும் துணிவுள்ள நிர்வாகியான கோத்தபாயவை ஆதரிப்பதன். மூலம் அனைத்து விடயங்களையும் சாதிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)



சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாகவுள்ள மாமனிதர் நடராஜா ரவிராஜின் திருவுருவச் சிலைக்கு ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ரவிராஜின் 13ஆவது ஆண்டு நினைவு நாளான கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அவர் அஞ்சலி செலுத்தினார். (படம்-சுபேசன்)

## சிவாஜிலிங்கத்தை ஆதரித்து நல்லூரில் பிரசாரக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கத்தை ஆதரித்து தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று 13 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழக செயலாளர் நாயகமும் வட மாகாண முன்னாள் மகளிர் விவகார அமைச்சருமான திருமதி. அனந்தி சசிதரன் தலைமையில் இடம்பெறும்.

இக் கூட்டத்தில். ஜனாதிபதி வேட்பாளரின் இணைப்புச் செயலாளர் த. தம்பிராசா, ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ந.சிறீகாந்தா ஆகியோர் கலந்து கொள்வார். (இ-5)

## உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

### பூரட்டாதி நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

அதிர்ஷ்ட ஜோதிடம்

பூரட்டாதி 1,2,3 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுடைய இராசி- கும்பம் ஆகும். அதன் அதிபதி- சனி ஆவார். அதன் சின்னம்-கும்பம் சுமந்த புருஷன் ஆகும். பூரட்டாதி நட்சத்திரத்தின் அதிபதி- குரு ஆவார். அதன் சின்னம்-ஆண் சிங்கம் ஆகும்.

எனவே இவர்களிடம் அதிக முன்கோபமும், தைரியமும், மூர்க்கக் குணமும் உண்டு. ஓரளவு நேர்மையாகவும் நடந்து கொள்வார்கள். நினைத்ததை சாதிக்கக் கூடிய மனவல்லமையும் உண்டு. இவர்களிடம் நல்ல குணமும், தீய குணமும் கலந்து காணப்படும். இடையே இடையே சோம்பேறித்தனம், மந்த புத்தி, பொறாமைக் குணம் முதலியன தோன்றி மறையும். பழிவாங்கும் சுபாவமும் இவர்களிடம் உண்டு. இவர்கள் தனது தாய், தந்தையர் மீது பாசமாக இருப்பார்கள். குழந்தை பாசமும் நன்றாக இருக்கும். நல்லவனுக்கு நல்லவன். கெட்டவனுக்கு கெட்டவன் என்ற கொள்கையுடன் இவர்கள் செயற்பட நேரிடும்.

பெரும்பாலும் இவர்கள் எண்ணெய், இரும்பு, நெருப்பு,கரன்ட் சம்பந்தமான தொழில் செய்ய நேரிடும். சிலர் அடிமைத் தொழில் உத்தியோகம் பார்க்க நேரிடும். இவர்களது இல்வாழ்வில் சிறு சிறு சண்டை சச்சரவுகள் வந்து விலக இடமுண்டு.

பணம் சம்பாதிப்பதில் இவர்கள் ஓரளவு கெட்டிக்காரர்களாகத் திகழ்வர். சகோதர பாசம் இவர்களிடம் குறைவாகவே இருக்கக் கூடும். சிலர் கலைத்துறையில் நுழைந்து பெரும் பணம் சம்பாதிக்கவும் இடமுண்டு. எதிரிகளை வெல்லக் கூடிய ஆற்றல் உண்டு. அடிக்கடி இவர்கள் சளித்தொல்லை, சுரம், தலைவலி, முதுகுவலி முதலியவற்றால் சிரமப்பட நேரிடலாம்.

## இராசி பலன்

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், தொழில் முயற்சிகளில் எதிர்பார்த்த சில திருப்பங்களைக் காண்பீர்கள், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மேடம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், உள்ளத்தில் ஒன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியத்தை முடிக்க பலமுறை அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** சுபதகவல்கள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், உறவினர்களிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் விலகும், பயணங்கள் எளிதில் கைகூடும்.

**கடகம்** மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செய் தொழில் மேன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**தனுசு** கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போட்டிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வியாபார விரோதம் விலகும்.

**விருச்சிகம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, தேவையற்ற விரயங்கள் ஏற்படலாம், கூட்டாளிகளிடம் விழிப்புணர்வு அவசியம், மறதியால் ஒரு சில பணிகளை தவறவிடுவீர்கள்.

**கன்னி** பூர்வீக சொத்துகளால் நன்மையுண்டு, வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காண்பீர்கள், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

இராசி பலன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | சந் | ராகு |
| | | | |
| | | | |
| சனி, கேது, குரு. | சுக் | சூரி, புத, செவ். | |

சந்திராஷ்டமம்

சுவாதி,விசாகம்

13.11.2019

ஐப்பசி 27,புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

பிரதமை முன்னிரவு 8.37 மணிவரை

கார்த்திகை முன்னிரவு 11.19 மணிவரை

சுபநேரம்- 4.37-6.07 மணிவரை

இராகுகாலம்-12.07-1.37 மணிவரை

கார்த்திகை விரதம்

அமிர்தசித்தம்

வளவன்

## வடமாகாண காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம்-விவசாய அமைச்சு

### கேள்வி அறிவித்தல்

வடமாகாண (CLIMATE SMART IRRIGATED AGRICULTURE PROJECT) காலநிலைக்கு சீரமைவான விவசாய திட்ட அலுவலகத்திற்கு, அலுவலக உபயோகத்திற்காக மாதாந்த வாடகை அடிப்படையில் வாகன சேவையைப் பெற்றுக்கொள்ளல்.

குறித்த விடயம் தொடர்பாக கேள்வி அறிவித்தல் மாகாண பிரதித் திட்டப் பணிப்பாளரால் கோரப்படுகின்றது.

**குறித்த கேள்வி ஆவணம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 27.11.2019**

குறித்த ஆவணத்தை கோவிந்தன் கடைச் சந்தி, வில்சன் வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்ட அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றேன்.

மாகாண பிரதி திட்டப்பணிப்பாளர்,
காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம் (வ.மா)
கோவிந்தன் கடைச் சந்தி, வில்சன் வீதி,
கிளிநொச்சி.

(C-8196)

பழமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

(945)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## ஜனாதிபதித் தேர்தல்-2019

உங்களின் வாக்கு!
தமிழ்த் தேசியத்திற்கா?
சிங்கள ஒடுக்குமுறையாளர்களுக்கா?

❖தேசியம் ❖தாயகம் ❖சுயநிர்ணய உரிமை

### எம்.கே.சிவாஜிலிங்கம்



உங்கள் வாக்கு
இம்முறை ஒரு தமிழருக்கு..!

தமிழ்ப் பொது வேட்பாளர்

**ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்**
**திரு. எம்.கே.சிவாஜிலிங்கத்தை**
**ஆதரித்து தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டம்.**

**தலைமை:** திருமதி அனந்தி சசிதரன்
(செயலாளர் நாயகம், ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம்,
வடக்கு மாகாண முன்னாள் மகளிர் விவகார அமைச்சர்)

**காலம்:** 13.11.2019 (புதன்கிழமை)
**இடம்:** இளங்கதிர் ச.ச.நிலைய மைதானம் றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
**நேரம்:** பி.ப 4.30 மணி.

**பேச்சாளர்கள்:** திரு.த.தம்பிராசா
(ஜனாதிபதி வேட்பாளாரின் இணைப்புச் செயலாளர்)
திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் (ஜனாதிபதி வேட்பாளர்)
**சிறப்புரை:** திரு.ந.சிறீகாந்தா-(சிரேஷ்ட சட்டத்தரணி செயலாளர் நாயகம், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
மற்றும் பலர் உரையாற்றுவார்கள்.
T.S.நாதனின் "மெகா ரியூனேர்ஸ்" இசைக் குழுவினரால்
புரட்சிப் பாடல்கள் இசைக்கப்படும்.

(009)

**தமிழ்த்தேசிய இனத்தின் மறுமலர்ச்சிக்கான மக்கள் சக்தி**

# ஜனாதிபதித் தேர்தல்-2019

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நடைபெறும் பொதுக்கூட்டம்.

**காலம்: 13.11.2019 புதன்கிழமை (இன்று)**
**இடம்: சங்கிலியன் பூங்கா, முத்திரைச் சந்தை, நல்லூர்.**
**நேரம்: பி.ப 3.00 மணி**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்.**

❖புதிய அரசியல் அமைப்பு: பிளவுபடாத மற்றும் பிரிக்க முடியாத நாட்டிற்குள் அதிகபட்ச அதிகாரப் பகிர்வு அமுல்படுத்தல்.
❖மாகாண சபைகளுக்கு தேவையான நிதிகளை ஈட்டுவதற்கும் பயன்படுத்துவதற்குமான அதிகாரம்.
❖இடம் பெயர்ந்தவர்களுக்கு மீள்குடியேற்றம் மற்றும் வீட்டு வசதிகள்.
❖விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் விடுவிக்கப்படுவர்.
❖காணாமல்போனோர் தொடர்பான நடவடிக்கை.
❖போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான நிவாரணம்.

ஆகிய விடயங்களை வலியுறுத்தி இடம்பெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

(C-116)

## சஜித் பிரேமதாஸ

#Nppoyouth
நாட்டை கட்டியெழுப்புவதற்கான கொள்கைகள்

# 71 வருட போலி அரிசியலுக்கு முற்றுப்புள்ளி!
# அநுரவின் யதார்த்த எழுச்சிக்கு பிள்ளையார் சுழி

எமது ஆட்சியில்



- இலங்கையின் தேசிய அரசியலில் தமிழர்களும் பங்குதாரார்கள்
- வடக்கு கிழக்கு போரில் குடும்ப தலைவரை இழந்த குடும்பத்துக்கு மாதாந்தம் 20000/= கொடுப்பனவு வழங்கப்படும்.
- அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்கள்.
- பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1000/= ரூபாவுக்கு அதிக சம்பளம் வழங்குதல்.
- பெருந்தோட்ட தமிழ் மக்களும் ஏனைய மக்களுக்கு சமமானவர்கள் என்பதை ஏற்று கொள்ளல்.
- அரசியலமைப்பின் 16வது திருத்தத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள தமிழ் மொழி பயன்பாட்டை உரியமுறையில் உறுதிப்படுத்தல்.
- சமுர்த்தி ஊக்குவிப்பு தொகையை 10000/= வரை அதிகரித்தல்.
- முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழு.

## தேசிய மக்கள் சக்தி

අනුර කුමාර දිසානායක
அனுர குமார திசாநாயக்க
**Anura Kumara Dissanayake**
X

## அநுர தான் இப்போ நாட்டோட TREND

# ஜனாதிபதி தேர்தல் - 2019

## என்ன செய்ய உத்தேசம் ?

**புள்ளடிகளால் ஒன்றுபடுவோம்**

**நமது ஒற்றுமையை**
**நமது அரசியல் உறுதிப்பாட்டை**
**நமது சுயகௌரவத்தை**
**நமது தன்மானத்தை**
**உலகம்காண.**

**நீங்கள் என்னை மறந்துவிடுங்கள். நான் ஒரு வெறும் குறியீடு மட்டுமே!**

இந்தத் தேர்தலில், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான முயற்சிகளை பலரும் செய்தனர்.
தமிழ்ச் சமூகத்தில் மதிப்புமிக்க மதத்தலைவர்களான திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவல் ஆண்டகை, யாழ் ஆயரின் சார்பில் குருமுதல்வர் அருட்திரு. ஜெபரட்ணம் அடிகளார், யாழ். சின்மயாமிஷன் வதிவிட சுவாமிகள் சிதாகாசானந்தா, திருகோணமலை தென்கைலை ஆதின பீடாதிபதி அகஸ்தியர் அடிகளார் ஆகியோர் இதற்காக இரவுபகலாக உழைத்தனர். பல புத்திஜீவிகளும் சிவில் சமூக பிரதிநிதிகளும் இதற்காக உழைத்தனர். எனினும் அந்த முயற்சி சுயநல அரசியலால் தோல்வியடைந்தது. இவ்வாறானதொரு சூழலில்தான், நான் இந்தத் தேர்தலில் போட்டியிடும் முடிவை எடுத்தேன்.

தமிழ் சமூகத்தில் மதிப்புமிக்க பெரியவர்கள் எல்லாம் ஏன் ஒரு பொது வேட்பாளர் தொடர்பில் சிந்தித்தனர்? தமிழ் மக்கள் எந்தவொரு சிங்கள வேட்பாளரையும் ஆதரிக்க கூடாது என்பதால்தானே! தமிழ் மக்கள் இலங்கைத் தீவின் ஒரு தனித்துமான தேசிய இனம் என்னும் வகையில் தங்களின் ஜனநாயக பலத்தை காண்பிப்பதற்கான ஒரு வாய்ப்பாக இந்தத் தேர்தலை பயன்படுத்திக் கொள்ள வேண்டும், அதன் மூலமாகவே தமிழர்களின் பேரம்பேசும் ஆற்றலை நிரூபிக்க முடியும். இந்த அடிப்படையில்தான் தமிழ் பொது வேட்பாளர் என்னும் சிந்தனை உருவானது. இதன் விளைவாகவே நான் உங்களின் முன்னால் நிற்கின்றேன். நீங்கள் எனக்கு தரும் பேராதரவு என்பது உண்மையில் எனக்கானதல்ல – அது பல்லாயிரக்கணக்கான உயிர்களின் தியாகத்தினால் உருப்பெற்ற தமிழ்த் தேசியத்திற்கானது. எதிர்வரும் நவம்பர் 16இல் புள்ளடிகளால் அதனை காண்பிப்போம். நீங்கள் நினைத்தால் எதனையும் மாற்றலாம்.

**உங்கள் உறவுகளின் கொலைகளுக்கு உரிமை கோரும் இருவரில் ஒருவருக்கா வாக்களிக்கப் போகின்றீர்கள்?**
**உங்கள் மனச்சாட்சியை கேளுங்கள்!**

நானே விடுதலைப் புலிகளை அழித்தேன் என்று கோட்டபாய ராஜபக்ச கூறுகின்றார். இல்லை நான்தான் அழித்தேன் என்று சரத்பொன்சேகா கூறுகின்றார் – அதற்காக அவரை பாதுகாப்பு அமைச்சராக்கப் போவதாக சஜித் பிரேமதாச கூறுகின்றார். எங்கள் இராணுவம் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று கோட்டா கூறுகின்றார். சஜித் பிரேமதாசவோ எனது உயிரைக் கொடுத்தாவது சிங்களத்தின் இராணுவத்தை பாதுகாப்பேன் என்கிறார். எமது மக்களை அதிகம் கொலை செய்தவர் யார் என்பதுதான் அவர்களின் பிரச்சினை. தாங்கள் ஒரு போதுமே மாறப் போவதில்லை என்பதை அவர்கள் தெளிவாகவே சொல்லுகின்றனர். இப்போது முடிவெடுக்க வேண்டியது பொறுப்பு யாருடையது? இரண்டு பக்கத்திலும் எமது உறவுகளை கொன்றவர்களை காப்பாற்ற வேண்டும் என்னும் வேட்கை அதன் கோரப்பல்லை காட்டிக்கொண்டிருக்கின்ற போது, மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு தமிழரதும் தெரிவு எதுவாக இருக்க முடியும்? நீங்கள் மீன் சின்னத்திற்கு போடும் ஒவ்வொரு புள்ளடியும் நாங்கள் எதையும் மறக்கவில்லை மன்னிக்கவும் இல்லை என்பதைச் சொல்லட்டும். நமது ஒற்றுமையை, ஜனநாயக பலத்தைக் காட்டுவதற்கான வாய்ப்பை வழங்குங்கள்.

**என்ன செய்யும் உத்தேசம்?**
**ஏமாந்தது போதாதா?**

தமிழ் மக்கள் கைதட்டும் பக்கமெல்லாம் ஓடிவருவார்கள் – அவர்கள் சிந்திக்கவே மாட்டார்கள் என்னும் எண்ணம் சிங்களவர்களிடம் மட்டுமல்ல எம் மத்தியில் சீவிக்கும் சில அரசியல்வாதிகளிடமும் உண்டு. எமது மக்களை ஏமாற்றுவது இலகு என்பதே அவர்களது நிலைப்பாடு. ஐந்து கட்சிகளின் உடன்பாடு என்றனர். 13அம்ச கோரிக்கை என்றனர். அதனடிப்படையில் பேச்சுவார்த்தை என்றனர். ஆனால் இன்று எதுவுமில்லை என்கின்றனர்! சிங்கள வேட்பாளர் ஒருவரை ஆதிரிக்குமாறு கூறுகின்றனர். மக்களை ஏமாற்றுவது தொடர்பில் எவரிடமும் எவ்வித குற்றவுணர்வும் இல்லை.
இது உங்களுக்கு எதனை உணர்த்துகின்றது? உங்களின் வாக்குகளை கேட்கும் சிங்கள வேட்பாளர்களும் உங்களை மதிக்கவில்லை. உங்களை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறும் அரசியல்வாதிகளும் உங்களை மதிக்கவில்லை. இப்போது நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்? மீன் சின்னத்திற்கு நீங்கள் போடும் ஒவ்வொரு புள்ளடியும் உங்களை ஏமாற்றுபவர்களுக்கான பதிலாக அமையட்டும்

**தமிழர்கள் பலியாடுகளா? சிந்திப்போம்**


சிங்கள ஆட்சியாளர்கள் காலம் காலமாக ஒரு உக்தியை பயன்படுத்தி வருகின்றனர். இதற்கு தமிழ் தலைவர்களும் அறிந்தும் அறியாமலும் பலியாகி வருகின்றனர். இனியும் இதனை அனுமதிப்பதா?
2015ல் மகிந்தவை காண்பித்து மைத்திரிக்கு வாக்களிக்குமாறு கூறினர். நாங்களும் வாக்களித்தோம். இப்போது கோட்டபாயவை காண்பித்து சஜித் பிரேமதாசவை ஆதரிக்குமாறு கூறுகின்றனர். சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்குள் சமஸ்டி ஒளிந்திருப்பதாக சம்பந்தன் கூறுகின்றார். கோட்டா வந்தால் வெள்ளை வேன் வரும் என்று கூறுகின்றனர். இதன் மூலம் ஒருவரை காண்பித்து இன்னொரு சிங்களவருக்கு வாக்களிக்குமாறு நாம் தூண்டப்படுகின்றோம். ஆனால் உண்மையென்ன? கோட்டாவோ சமஸ்டி பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்கிறார். சஜித் பிரேமதாசவோ சமஸ்டிபற்றி தான் ஒரு போதுமே பேசியதில்லை, பேசப்போவதுமில்லை என்கிறார். ஒருவர் வெள்ளை வேன் கலாசாரத்தை ஆரம்பித்துவைத்தவரின் மகன் சஜித்பிரேமதாச. இன்னொருவரோ அதனை பயன்படுத்தி தமிழர்களை வேட்டையாடியவரின் தம்பி கோட்டபாய ராஜபக்ச – இதில் எவர் வென்றாலும் நாம் மீண்டும் எமது உரிமைகளுக்காக போராடத்தான் போகின்றோம். பின்னர் எதற்காக இவர்களுக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும்? நாங்கள் சிங்களவர்களின் இறைச்சிக்கடை அரசியலில், தொடர்ந்தும் பலியாடுகளாகவே இருக்கப் போகின்றோமா அல்லது மீன் சின்னத்திற்கு வாக்களித்து சிங்கள நரித்தனத்தை தோற்கடிக்கப் போகின்றோமா? நீங்கள் போடும் ஒவ்வொரு புள்ளடியும் நாங்கள் எவரதும் பலியாடுகள் இல்லை என்பதைச் சொல்லட்டும்.

**காலத்தை தவறவிட்டால் பின்னர் கண்டவரெல்லாம் கதவை தட்டுவர்.**

இன்று கூட்டமைப்பு சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக கூறுகின்றது. இந்த சஜித் யார்? தமிழர் தாயகப்பகுதியில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சிங்கள ஆக்கிரமிப்புக்கள் – பௌத்தமயமாக்கல் தொடர்பில் இவரது நிலைப்பாடு என்ன? இவர் புத்தசாசன மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி அமைச்சராக இருந்தவர். இவர் அமைச்சராக இருக்கின்ற போதுதான் திருகோணமலை கன்னியா வென்னீருற்று தொல் பொருள் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டது. அங்கு பௌத்த விகாரை ஒன்றை கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முல்லைத்தீவில் நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த பிக்கு ஒருவரின் உடல் எரிக்கப்பட்டது. இது பற்றி எப்போதாவது சஜித் பிரேமதாச வாய்திறந்துண்டா? பௌத்த பிக்குகளை கண்டித்ததுண்டா? ஒரு சந்தர்ப்பத்தில் கூட தமிழ் மக்களின் நியாயத்திற்காக சஜித் குரல் கொடுத்ததில்லை. இப்படியான ஒருவர் தமிழர் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவார் என்பதை எப்படி நம்பலாம்? 2015 இற்கு முன்னர் மகிந்த ராஜபக்ச அரசாங்கம் ஆக்கிரமிப்புக்களை நேரடியாகச் செய்தது. அதற்கு தலைமை தாங்கியவர் கோட்டபாய ராஜபக்ச. 2015இற்கு பின்னர் வந்த அரசாங்கம் ஆக்கிரமிப்புக்களை நன்கு திட்டமிட்டு, தருணம் பார்த்து செய்தது. அதற்கு தலைமை தாங்கியவர் சஜித் பிரேமதாச. இதன் காரணமாகத்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மையினர் சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக ஏற்றுக்கொண்டனர். எங்களுக்கு முன்னால் மீண்டுமொரு ஏமாற்று நாடகம் அரங்கேறுகின்றது. மீண்டும் ஏமாறப் போகின்றோமா? நீங்கள் மீன் சின்னத்திற்கு போடும் ஒவ்வொரு புள்ளடியும் நாங்கள் இனியும் ஏமாறப் தயாரில்லை என்பதை சொல்லுவதாக அமையட்டும். காலத்தை தவறவிட்டால் பின்னர் கண்டவரெல்லாம் கதவை தட்டுவர்.

**-எம்.கே.சிவாஜிலிங்கம்**





# முழங்காவிலில் 104 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது



(முறிகண்டி)

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில்104 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி முழங்காவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்லவராயன் கட்டுப் பகுதியில் வைத்து குறித்த கஞ்சாப் பொதிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பில் இருந்து வருகை தந்த விசேட போதை ஒழிப்பு பிரிவினரால் சோதனை மேற்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த குழுவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து அப்பகுதியில் சோதனை மேற்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகள் மற்றும் கைதானவர்களை குறித்த குழுவினர் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (9-100)

# ஸ்கந்தபுரம் குடும்பப்பெண் படுகொலை! கணவர் உட்பட இருவர் கைது

(முறிகண்டி)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இளம் குடும்பப் பெண் கொலைச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் பெண்ணின் கணவர் உட்பட இருவர் அக்கராயன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை வீட்டில் தனித்திருந்த 9 மாத பச்சிளம் பிள்ளையின் தாய் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அக்கராயன் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி கருணாமூர்த்தி வினோத் தலைமையிலான பொலிஸ் குழு தீவிர விசாரணைகளில் ஈடுபட்டது. விசாரணையின் அடிப்படையில் குறித்த பெண்ணின் கணவர் மற்றும் அவரது சகோதரியின் கணவர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடும்பத்தில் ஏற்பட்டு வந்த நீண்ட நாள் தகராறு காரணமாக குறித்த சம்பவம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், பணத்திற்காக குறித்த இளம் குடும்பப் பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார் சந்தேக நபர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (9-100)




# முல்லைத்தீவில் பின்தங்கிய கிராமங்களில் போக்குவரத்து வசதியின்மையால் நெருக்கடியை எதிர்கொள்ளும் மாணவர்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட கூடுதலான பாடசாலைகளுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதாக துணுக்காய் வலயக்கல்வி பணிமனையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள 61 பாடசாலைகளில் தற்போது எண்ணாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் மேற்படி கல்வி வலயத்தின் கீழ் உள்ள கூடுதலான பாடசாலைகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ளதுடன் போதிய போக்குவரத்து வசதிகள் இன்றியே காணப்படுகின்றன.

அதாவது துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள மாந்தை கிழக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட மூன்றுமுறிப்பு, பனங்காமம், சிறாட்டிகுளம், பாலைப்பாணி, விநாயகபுரம் ஆகிய பாடசாலைகளும் துணுக்காய் கோட்டத்தின் கீழ் கோட்டைகட்டியகுளம் பாடசாலை, அம்பலப்பெருமாள்குளம் பாடசாலை, தென்னியன்குளம் பாடசாலை, உயிலங்குளம் பாடசாலை, ஆலங்குளம் பாடசாலை, தேறாங்கண்டல், ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், அம்பாள்புரம் பாடசாலைகள் உள்ளடங்கலாக சுமார் 20 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு எந்தவித போக்குவரத்து வசதிகளும் இல்லாத நிலை காணப்படுவதுடன், ஆசிரியர்கள் தங்கியிருக்கக் கூடிய வசதிகள் எவையும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

ஏனைய பாடசாலை அமைந்துள்ள பகுதிகளுக்கான போக்குவரத்து வசதிகள் இருந்தாலும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கு ஏற்றவகையில் இல்லாது காணப்படுகின்றன.

இதனால் எதுவித போக்குவரத்து வசதிகளும் இல்லாத கிராமங்களில் அமைந்துள்ள சுமார் 20 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறான நிலைமை தொடர்பில் துணுக்காய் வலயக்கல்வி திணைக்களத்திடம் தொடர்புகொண்டு வினவிய போது மேற்படி வலயத்தின் கீழ் 61 பாடசாலைகளில் அதிகளவான பாடசாலைகள் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் இயங்கி வருகின்றன. இதற்கான போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் ஆசிரியர்களும் மாணவர்களும் அன்றாடம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இப்பாடசாலைகளில் கல்வி கற்று வரும் மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (9-315)

# உரிமைக்காக குரல் கொடுத்த கூட்டமைப்பு இன்று பணத்திற்காக குரல் கொடுக்கிறது

## புதிய ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவிப்பு



(நெளுக்குளம்)

அன்று உரிமைகளுக்காக குரல் கொடுத்த கூட்டமைப்பு இன்று பணத்திற்காக குரல் கொடுக்கின்றதென புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் ந.ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்று நடந்த யுத்தத்தின் போது யுத்த காலத்திலேயே மௌனமாக இருந்த கூட்டமைப்பு இன்று எமது தமிழ் மக்களுக்கு எதிராக தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்கிற செயற்பாடுகளைச்செய்கிறார்கள்.

அன்று நாட்டிலே 50 நாள் பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக நீதிமன்றம் சென்றார்கள். அதிலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சுமந்திரனும் சென்றிருந்தார். ஆனால் ஒருநாளாவது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நாடாளுமன்றம் சென்றிருக்கிறாரா? அல்லது தமிழ் மக்களின் பிரச்சினைக்காக நாடாளுமன்றம் சென்றிருக்கின்றாரா? ஐக்கிய தேசிய கட்சியை தனது வங்குரோத்து அரசியலுக்காக அவர் அன்று நீதிமன்றம் சென்றதையிட்டு மன வேதனையடைகின்றேன். எவ்வளவு அரசியல் கைதிகள் வழக்கு தொடர முடியாமல் துன்பத்துக்குள்ளாகியிருக்கின்றார்கள்.

அரசியல் கைதிகளை சென்று பார்த்தேன். அவருடைய வேதனையை பார்க்கும்போது உண்மையாக எனக்கு கண்ணீர் வருகின்றது. ஆனால் இந்த நாட்டிலே ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு துணையாக நின்ற ரிஷாட் பதியுதீன் ஐக்கிய தேசிய முன்னணியின் மேடையிலேயே நிற்கின்றார். ஆனால் அவர் இன்று நல்லவர் போல் நழுத்துக்கொண்டு அவர்களை சட்டத்திற்கு புறம்பாக சிறைக் கூடங்களில் வைத்திருப்பவர்களை கூட அவர் இன்று வெளியிலெடுத்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால் எமது தமிழ் அரசியல் கைதிகள் அநாதையாக்கப்பட்டுள்ளார்கள். கூட்டமைப்பு இன்று கூத்தாடிக் கொண்டிருக்கின்றது. எங்களுடைய அரசாங்கம் வரும். அந்த அரசாங்கத்தின் கீழ் நாங்கள் பலமாக இருப்போம். எமது புதிய ஜனநாயக மக்கள் முன்னணி வருகின்ற 17 ஆம் திகதி உறுதியாக ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி அடைவார். இவர்களுடைய கோரிக்கைகளை கோத்தபாய ராஜபக்ஷவிற்கு முன்வைத்து அவர்களுக்கான விடுதலையை நாங்கள் பெற்றுத் தருவோம் என மேலும் தெரிவித்தார். (9-299)

# தனியார் வர்த்தக நிலையங்களில் அதிகூடிய விலைக்கு விற்கப்படும் உரவகைகள்-விவசாயிகள் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் தனியார் வர்த்தக நிலையங்களில் கட்டுப்பாட்டு விலைகளை மீறி அதிகூடிய விலைகளில் உரவகைகள் விற்பனை செய்யப்படுவதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் விவசாயிகளுக்கான மானிய உரம் கமநலசேவை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றபோதும் விவசாயிகளுக்கான உரவகைகள் போதுமானதாக இல்லாத நிலையில் விவசாயிகள் கமநல சேவை நிலையங்களின் மூலம் விற்பனை செய்யப்படும் உரத்தினை கடந்த போகங்களில் கொள்வனவு செய்து பயன்படுத்தி வந்தனர்.

தற்போது கமநலசேவை நிலையங்களில் விற்பனைக்கான உரம் இல்லாத நிலையில் தனியார் வர்த்தக நிலையங்களில் உரத்தினை கொள்வனவு செய்து வருகின்றனர்.

இந்நிலையில் தனியார் வர்த்தக நிலையங்களில் கட்டுப்பாட்டு விலைகளைவிட அதிகூடிய விலைகளில் உரம் விற்பனை செய்யப்படுவதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். (9-315)

# முழுநிலா கலைவிழா



(அக்கராயன்)

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் முழுநிலாக் கலைவிழா நேற்று கிளிநொச்சி தருமபுரம் மகா வித்தியாலயத்தில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கிறிஸ்தோபர் கமலராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாணவர்களின் கலை நிகழ்வுகள், மதிப்பளிப்புகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயத்தின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (9-350)

# சஜித் ஜனாதிபதியானால் அரசியல் கைதிகளுக்கு விடுதலை

## வவுனியாவில் விஜயகலா உறுதி



(குருமன்காடு)

**சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியானதும் மிகுதியாகவுள்ள அரசியல் கைதிகளும் பொதுமன்னிப்பு அடிப்படையில் விடுவிக் கப்படுவர். அதற்கான அழுத்தங்கள் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டு வரு கின்றது என கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித் துள்ளார்.**

வவுனியா மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளர் கருணாதாசவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் எங்களுக்கு நடைபெற்ற அநீதிகள், துன்பங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அதிலிருந்து விடுதலை பெற வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தல் ஊடாக நாங்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தோம். அதற்கும் அப்பால் இன்று சஜித் பிரேமதாஸ தேர்தலில் போட்டியிடுகின்றார்.

அவருடைய வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் வாழும் பெண்களின் வாழ்வாதாரத்திற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதாக தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் போன்ற கொடூரமான வாழ்க்கையை நாம் கடந்த காலத்தில் வாழ்ந்திருக்கின்றோம். அப்படியானவற்றுக்கு நாம் இடமளிக்கக் கூடாது. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஒவ்வொரு குடும்பமும் பாதிக்கப் பட்டுள்ளது.

நாம் குறுகிய காலத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்தி ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி இந்த நாட்டை ஒரு ஜனநாயக நாடாக கொண்டு வந்திருக்கின்றோம். இந்த வாக்குகளின் ஊடாக ஜனநாயகத்தை உறுதிப்படுத்த முடியும்.

ஜனநாயக நாடு தான் எங்களுக்கு வேண்டும். வெள்ளைவான் கலாசாரம் வேண்டாம். எங்களுடைய காணிகள் வேண்டும். எனவே சஜித் பிரேமதாஸவை வெற்றி பெறச் செய்வோம் என மேலும் தெரிவித்தார். (9-250)



# நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கும் புதுக்குடியிருப்பு அஞ்சல் அலுவலகம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு அஞ்சல் அலுவலகம் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் தனியார் வீட்டில் தொடர்ந்தும் இயங்கி வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் மிக முக்கிய உபநகரங்களில் ஒன்றாகக் காணப்படும் புதுக்குடியிருப்பு பகுதியானது மக்கள் மீள்குடியேறி ஆறு ஆண்டுகள் கடந்துள்ள போதும் இதுவரை மக்களுக்கான சேவைகளை வழங்க வேண்டிய கட்டமைப்புக்கள் முழுமை பெறாத நிலை காணப்படுகின்றது.

அந்த அடிப்படையில் புதுக்குடியிருப்பு பிரதான அஞ்சல் அலுவலகத்திற்கான கட்டடம் கடந்த யுத்தகாலத்தில் சேதமடைந்து முழுமையாக அழிவடைந்த நிலையில் குறித்த அஞ்சல் அலுவலகம் தனியார் வீடொன்றில் இயங்கி வருகின்றது. புதுக்குடியிருப்பு நகரின் இரணைப்பாலை வீதி பிரதான வீதியில் குறித்த அஞ்சல் அலுவலகத்திற்கான காணி உள்ளபோதும் அதன் கட்டடம் முழுமையாக அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்நிலையில் மேற்படி அஞ்சல் அலுவலகமானது மீள்குடியேற்றத்தின் பின்னரான காலப்பகுதியில் புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் மேற்படி அஞ்சல் அலுவலகத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறு கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக புதுக்குடியிருப்பு அஞ்சல் அலுவலகமானது போதிய இட வசதிகள் இன்றியும் அடிப்படை வசதிகள் இன்றியும் தனியார் வீட்டில் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-315)

# வீதி விபத்துக்களை தடுப்பதற்கு மாற்று நடவடிக்கைகளை செயற்படுத்துங்கள்

## லிங்கநாதன் வவு. நகரசபைக்கு கடிதம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்களை குறைப்பதற்கு மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முன்னாள் வவுனியா நகரசபை தலைவரும், முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான ஜி.ரி.லிங்கநாதன் நகரசபை தலைவர் கௌதமனுக்கு கடிதம் மூலம் ஆலோசனை தெரிவித்துள்ளார். குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா நகரப்பகுதியானது கூடுதலான மக்கள் நடமாட்டத்தினைக் கொண்டதாகவே காணப்படுவதுடன் வாகன நெரிசல்களும் அதிகரித்தே காணப்படுகின்றது.

தற்போது ஏற்படுகின்ற வாகன, வீதி விபத்துக்களை தவிர்க்கும் நோக்கில் தங்களது நிர்வாகம் வவுனியா பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள கீழ்வரும் விடயங்களையும் முன்னிலைப்படுத்துமாறு கேட்டு கொள்கின்றேன்.

குறிப்பாக ஹொரவபொத்தான வீதியில் வவுனியா பொது வைத்தியசாலை பகுதியில் இருந்து சூசைப்பிள்ளையார்குளம் வரையான வீதியின் இருமருங்கிலும் வாகனங்களை நிறுத்த தடைசெய்தல், பாடசாலைகள் ஆரம்பித்து, முடிவடையும் குறிப்பிட்ட நேரப் பகுதியில் கனரக வாகனங்கள் பயணிப்பதை தடை செய்தல், குருமன்காடு-தாண்டிக்குளம் வீதியில் கனரக வாகனப் போக்குவரத்தினை தடை செய்தல், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வேறு வீதியின் ஊடாக கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு ஒழுங்கு செய்தல் போன்ற விடயங்களை கருத்தில் கொண்டு வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு அண்மையில் இடம்பெற்ற சிறுமியின் மரணத்தை தொடர்ந்து இனியொரு மரணங்களும் நிகழாத வண்ணம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (9-299)

# குளங்களில் நன்னீர் மீன்குஞ்சுகளை விடுங்கள்

## மீன்பிடிச் சங்கங்கள் வலியுறுத்தல்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரிய, சிறிய குளங்களில் நன்னீர் மீன் குஞ்சுகளை விடுவதற்கான ஏற்பாடுகளை மாவட்டச் செயலகம் மேற்கொள்ள வேண்டும் என நன்னீர் மீன்பிடிச் சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடியினை நம்பி பெருமளவு குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் கடந்த மாதங்களில் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாக பல குளங்களின் நீர் மட்டம் அடிநிலையினைச் சென்றதன் காரணமாக நன்னீர் மீன் பெருக்கம் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

இந்நிலையில் தற்போது மழையினால் குளங்களின் நீர் மட்டம் உயர்ந்து வரும் நிலையில் சகல குளங்களுக்கும் நன்னீர் மீன் குஞ்சுகளை விடுவதன் மூலம் நன்னீர் மீன் பெருக்கம் அதிகரிக்கும்.

இதன் மூலம் நன்னீர் மீன்பிடியினை நம்பியுள்ள பெருமளவு குடும்பங்கள் நன்மையடையும். இதற்கான ஒழுங்குகளை மாவட்டச் செயலகம் மேற்கொள்ள வேண்டும். தற்போது மீன் குஞ்சுகளை குளங்களில் விடுவதற்கான சூழ்நிலையும் காலநிலையும் காணப்படுவதாக மீன்பிடிச் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த ஆண்டு மாவட்டத்தில் உடைப்பெடுத்த ஏழு குளங்களுக்கும் மீன் குஞ்சுகள் விடுவது அவசியமாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (9-350)



**வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் கல்லூரியின் அதிபர் எம்.எஸ். ரம்சீன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி. தியாகயோதி யுவராஜா கலந்துகொண்டார்.**

**(படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)**

# துவிச்சக்கர வண்டி வழங்கி வைப்பு

(நெளுக்குளம்)

சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாற்றுத்திறனாளியான மாணவியொருவருக்கு V 3 Foundation தலைவரும் லண்டன் பல்கலைக் கழக விரிவுரையாளருமான கலாநிதி ச.சிவதாஸன் தனது 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு துவிச்சக்கர வண்டி ஒன்றை வழங்கி வைத்தார்.



மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் உதவிக்கல்விப்பணிப்பாளர் செந்தில்குமரன், கல்லூரி அதிபர் திருமதி மனோகௌரி மற்றும் ஆசிரியர்கள் சகிதம் மாணவிக்கு துவிச்சக்கரவண்டி வழங்கி வைக்கப்பட்டது. (9-299)

# நஞ்சுண்ட காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

(பூநகரி)

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நஞ்சுண்டகாட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் பூநகரி பொலிஸாரால் முற்றுகையிடப் பட்டுள்ளது.

பூநகரி பொலிஸ் நிலைய பொலிஸ் சாஜன்ட் கிருபாகரனுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கடந்த வாரம் பொலிஸ் குழு ஒன்று குறித்த பகுதிக்கு சென்று தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அப்போது கசிப்பு உற்பத்திசெய்யப்படும் இடம் கண்டுபிடிக்கப் பட்டது.

குறித்த பகுதி பொலிஸாரால் முற்றுகை செய்யப்பட்ட போது அங்கிருந்த இருவர் தப்பிச் சென்றுள்ளனர். அங்கிருந்து 32 லீட்டர் கசிப்பு, 2 பெரல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் தப்பிச்சென்றவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்தியை தடைசெய்யுமாறு அப்பகுதி மகளிர் அமைப்புக்கள் தொடர்சியாக பொலிஸாரிடம் முறையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-84)




# பாரதம்

## அவுஸ்திரேலியாவில் பரவும் காட்டுத்தீ; அவசரகாலச் சட்டம் அறிவிப்பு

### 600 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன





(சிட்னி)

அவுஸ்திரேலியா்வில் நியூ சவுத் வேல்ஸ் மற்றும் குயின்ஸ் லாந்து ஆகிய மாநிலங்களில் காட்டுத் தீ வேகமாகப் பரவி வருகின்றது.

சிட்னிக்கு வட மேற்கேயுள்ள சுமார் இரண்டாயிரம் வீடுகளில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

அந்த பிராந்தியங்களை புகை மூட்டம் சூழ்ந்துள்ளது. நியூ சவுத் வேல்ஸின் சில இடங்களில் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூ சவுத் வேல்ஸின் 52 இடங்களில் தொடர்ந்தும் காட்டுத் தீ பற்றியெரிவதாக மீட்புப் படைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குவின்ஸ்லாந்து மாநிலத்திலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

600-க்கும் அதிகமான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. காட்டுத்தீ காரணமாக சுமார் ஆறு மில்லியன் பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (2)

## இங்கிலாந்து இளவரசர் இந்தியாவுக்கு விஜயம்



(லண்டன்)

இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் இரு நாள் பயணமாக இன்று புதன்கிழமை இந்தியா வருகிறார். இங்கு இரு நாட்கள் தங்கியிருக்கும் அவர், ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடைபெறும்.

மேலும் பல்வேறு நிகழ்வுகளில் அவர் பங்கேற்க இருப்பதாக இந்தியாவுக்கான இங்கிலாந்து தூதர் சர்டோமினிக் அஸ்குயித் தெரிவித்தார்.

இயற்கை பேரிடர் மற்றும் பருவநிலை மாற்றத்தை வலிமையுடன் எதிர்கொள்வது குறித்து இந்திய வானிலை ஆய்வுத்துறை அதிகாரிகளுடன் சார்லஸ் ஆலோசனை நடத்துவார். மேலும் தேசிய பேரிடரை எதிர்கொள்வதற்கு புதிய கண்டுபிடிப்புகளை இந்தியா எவ்வாறு பயன்படுத்துகிறது? என்பது குறித்தும் அவர் அறிந்து கொள்வார்.

தனது 71ஆவது பிறந்த நாளை 14 ஆம் திகதி வியாழக்கிழமை இந்தியாவிலேயே கொண்டாடும் இங்கிலாந்து இளவரசர் சார்லஸ், சமூக மேம்பாட்டு திட்டங்களில் சிறப்பான பங்களிப்பை செய்தமைக்காக இந்தியருக்கு கொமன் வெல்த் விருதையும் வழங்க உள்ளார்.

மேலும் இந்தியாவின் முன்னணி வர்த்தகர்களை சந்தித்து பேசும் சார்லஸ், நிலையான சந்தை நிலவரத்தை கண்டடைவதற்கான ஆலோசனை மற்றும் வழிமுறைகளை அவர்களிடம் கேட்டுப்பெறுவார் எனவும் டோமினிக் அஸ்குயித் தெரிவித்தார். (2)

## குடல் நோய்த் தொற்றை தடுக்கும் சூரிய ஒளி

(ஒட்டாவா)

மனித உடலின் நலனை மேலும் அதிகரிப்பதற்கு தோலின் மீது தினமும் சிறிதளவாவது சூரிய ஒளிபடவேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

தோல் மீது சூரிய ஒளிபடுவதற்கும், மனித குடலுக்குள் வசிக்கும் இலட்சக்கணக்கான ட்யன்மிக்க நுண்ணுயிரிகளுக்கும் நேரடி தொடர்பு இருப்பதை, முதல் முறையாக கனடாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

சூ்ரிய கதிரிலுள்ள புற ஊதா கதிர்கள், தோலின் மீது படும் போது, விற்றமின்-D, நம் உடலில் உற்பத்தியாகிறது.

குடலில் உள்ள நுண்ணுயிரிகள் பல்கிப் பெருகுவதற்கு, இந்த விற்றமின் - D மிகவும் அவசியமாகின்றது.

அந்த வகையில் குடலின் ஆரோக்கியத்திற்கு, குறிப்பாக, குடலில் உள்ள நுண்ணுயிரிகளின் பல்லுயிர் பெருக்கத் தன்மைக்கும் சூரிய ஒளி மிகவும் முக்கியம் இதனை மனித சோதனைகள் மூலம் கனடா விஞ்ஞானிகள் நிறுவியிருப்பதாக, 'பிரான்டியர்ஸ் இன் மைக்ரோபயாலஜி' இதழ் தெரிவித்துள்ளது. (2)

## புகையிரதங்கள் மோ

## 15 பேர் உயிரிழப்பு,6





(டாக்கா)

பங்களாதேஷில் இரு புகையிரதங்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் 15 பேர் உயிரிழநதனர்.

சிட்டங்கொங்கிலிருந்து பயணித்துக்கொண்டிருந்த புகையிரதமும் தலைநகர் டாக்காவிலிருந்து பயணித்துக்கொண்டிருந்த புகையிரதமும் பிரஹ்மன்பாரியா என்ற இடத்தில் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து ஏற்பட்டது.

புகையிரதங்கள் நேருக்குநேர் மோதியமையினால் சிட்டங்கொங்கிலிருந்து பயணித்துக்கொண்டிருந்த புகையிரதத்தின் மூன்று பெட்டிகள் முற்றாக சிதைவடைந்துள்ளன.

இதுவரை 15 பயணிகளின் உடல்களை மீட்டுள்ளோம். பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்

## பீகார் மாநிலத்தில் புனி

## ஆற்றில் மூழ்கி மூன்று

(பீகார்)

பீகார் மாநிலம் நாளந்தாவில் கார்த்திகை பூர்ணிமாவை முன்னிட்டு ஆற்றில் புனித நீராடிய போது 3 குழந்தைகள் தண்ணீரில் மூழ்கி பலியாகினர்.

வடமாநிலங்களில் நேற்று கார்த்திகை பூர்ணிமா உற்சாகமாக கொண்டாடப்பட்டது. இதன் முக்கிய அம்சமாக, நாடு முழுவதிலும் புனித தலங்களில் உள்ள ஆறுகள், குளங்கள் போன்ற நீர்நிலைகளில் மக்கள் புனித நீராடுகின்றனர். இதற்காக நீர்நிலைகளில் ஏராளமானோர் திரண்டனர்.

## நிமோனியாக் சு

## 39 நிமிடங்களுக்கொ

### உலக சுகாதார அமை

(ஜெனிவா)

நிமோனியாக் காய்ச்சல் காரணமாக கடந்த ஆண்டு மாத்திரம் சுமார் 8 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்ததாக உலகச் சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

அதாவது 39 நிமிடங்களுக்கு ஒரு குழந்தை உயிரிழந்ததாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

நிமோனியாக் காய்ச்சலைத் தடுக்க முடியும் என்றும், அது குணப்படுத்தக்கூடிய நோய் என்றும் உலகை சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நிமோனியாக் காய்ச்சலைத் தடுக்க

# வெளிநாடு

## ாதி கோர விபத்து; ,60 பேர் படுகாயம்



என அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

60ற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயணிகள் உறக்கத்திலிருந்த வேளையிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என உயிர்தப்பியவர்கள் தெரிவித்தனர்.

பாரிய சத்தமொன்று கேட்டது. பயணிகள் அலறுவதை நான் பார்த்தேன் என ஒரு பயணி தெரிவித்துள்ளார்.

இரு புகையிரதங்களும் ஒரே தண்டவாளத்தில் எப்படி பயணித்தன என்பது தெரியவில்லை என தெரிவித்துள்ள அதிகாரிகள் விசாரணைகள் இடம்பெறுவதாக தெரிவித்துள்ளனர். (2)

## ித நீராடலின் போது று குழந்தைகள் பலி!

புனித நீராடலையொட்டி கூட்ட நெரிசல் ஏற்படாமல் தடுக்கும் வகையில், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

பீகார் மாநிலம் பவபுரியில் உள்ள நதியிலும் கார்த்திகை பூர்ணிமாவை முன்னிட்டு ஏராளமானோர் புனித நீராடினர். ஆற்றில் இறங்கி குளித்துக் கொண்டிருந்தவர்களில் 3 குழந் தைகள் ஆழமான பகுதிக்கு சென்றபோது நீச்சல் தெரியாததால் மூழ்கி உயிரிழந்தனர்.

அவர்களின் சடலங்களை மீட்புக் குழுவினர் மீட்டுள்ளனர். (2)

## காய்ச்சலால் ாரு குழந்தை இறப்பு

### மைப்பு சுட்டிக்காட்டு

சிறந்த வசதிகள் இருந்தபோதும் குழந்தைகள் அதிகளவில் இறப்பது கவலையளிப்பதாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியமும், சில குழந்தைப் பாதுகாப்பு அமைப்புகளும் இணைந்து நிமோனியாக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த அரசாங்கங்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன.

நிமோனியாக் காய்ச்சல் நுரையீரலைத் தாக்கும், அதனால் மூச்சுக்கோளாறு ஏற்பட்டு மரணத்தில் முடியலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (2)

## அமெரிக்க பல்கலை. விரிவுரையாளர்களை மீட்பதற்காக தலிபான்களை விடுவிக்க முடிவு

(காபுல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் பிடியில் இருக்கும் அமெரிக்க பல்கலைக்கழக விரிவுரையாளர்களை மீட்க அந்த இயக்கத்தைச் சேர்ந்த 3 பயங்கரவாதிகளை விடுவிக்க முடிவு செய்துள்ளனர்.



ஆப்கானிஸ்தானில் குறிப்பிட்ட சில பகுதிகளில் தலிபான் பயங்கரவாதிகள் ஆதிக்கம் அதிகமாகவுள்ளது. அரசுக்கு எதிராக பயங்கரவாத தாக்குதலை அவ்வப்போது நடத்தி வருகிறது. இராணுவமும் பொலிஸாரும் அவர்களுக்கு பதிலடி கொடுத்து வருகிறது. மேலும் பயங்கரவாதிகள் பலரை கைது செய்து சிறை வைத்துள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானின் அமெரிக்க பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரு விரிவுரையாளர்களை தலிபான் பயங்கரவாதிகள் கடத்தினர். அவர்களை மீட்க பல்வேறு முயற்சிகளை அரசு மேற்கொண்டது. ஆனால் தற்போது வரை அவர்கள் விடுவிக்கப்படவில்லை.

இந்நிலையில், பிணைக் கைதிகளான அமெரிக்க பல்கலைக்கழக பேராசியர்களை மீட்க சிறையில் இருக்கும் 3 தலிபான் பயங்கரவாதிகளை விடுவிக்க உள்ளதாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப்கானி தெரிவித்தார்.

இதுகுறித்து தொலைக்காட்சி நேரலையில் பேசிய கானி, '3 தலிபான்கள் விடுவிக்க்ப்பட்டு கட்டாருக்கு அனுப்பி வைக்கப் படுவார்கள். அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இரு விரிவுரையாளர்கள் தலிபான்களால் விடுவிக்கப்படுவார்கள்' என கூறினார். (2)

## பொலிவியாவில் நெருக்கடி; மெக்சிக்கோவில் தஞ்சமடைந்த முன்னாள் ஜனாதிபதி



(சூக்ரே)

பொலிவியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி இவோ மொராலஸ்க்கு அரசியல் தஞ்சம் அளிப்பதற்கு மெக்சிக்கோ இணங்கியுள்ளதாக அதன் வெளிவிவகாரத்துறை அமைச்சர், மார்செலோ எப்ரார்ட் தெரிவித்தார்.

தேர்தல் மோசடி ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் பொலிவியாவின் ஜனாதிபதி பதவியை துறந்த ஒரு நாளுக்கு பின்னர் மெக்சிக்கோவில் அரசியல் தஞ்சமடைவதற்கான வாய்ப்பை ஈவோ மொரலஸ் ஏற்றுக்கொண்டுள்ளார். இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், பொலிவியாவை விட்டு வெளியேறுவது வேதனையளிப்பதாகவும், ஆனால் அவர் மேலும் "வலிமை மற்றும் ஆற்றலுடன்" திரும்பவுள்ளதாகவும் பதிவிட்டுள்ளார். (2)

## சொக்லேட் என எண்ணி எலி மருந்தை சாப்பிட்ட சிறுவன் மரணம்

(கோவை)

கோவை தெலுங்குபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் சிவசுப்பிரமணியம். இவரது மகன் முத்துசெல்வன்(வயது 10). இவர் அந்த பகுதியில் உள்ள பள்ளியில் 5ஆம் வகுப்பு படித்து வந்தார். தனது நண்பர்களுடன் தனது வீட்டில் விளையாடினார். அப்போது வீட்டில் இருந்த சொக்லெட்டை எடுத்து சாப்பிட்டுள்ளார். அதனை சாப்பிட்ட சிறிது நேரத்தில் மயங்கி விழுந்தார். இதை பார்த்த மற்ற சிறுவர்கள் அதிர்ச்சியடைந்து முத்துசெல்வன் பெற்றோரிடம் கூறினர்.

அவர்கள் வந்து பார்த்தபோது சிறுவன் வாயில் நுரை தள்ளியபடி மயங்கி கிடந்தான். இதனால் அதிர்ச்சியடைந்த சிறுவனின் பெற்றோர் அவன் சாப்பிட்டதாக கூறிய சொக்லெட்டை எடுத்து பார்த்தனர். அதுெ சாக்லெட் அல்ல. வீட்டில் எலி தொல்லைக்காக வாங்கி வைத்திருந்த எலி மருந்து என்பதும், அதனை சிறுவன் தெரியாமல் எடுத்து சாப்பிட்டதும் தெரியவந்தது.

இதையடுத்து பெற்றோர் சிறுவனை தூக்கி கொண்டு கோவை அரசு வைத்தியசாலைக்குச் சென்றனர். அங்கு அவனுக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். இருப்பினும் நேற்று முன்தினம் காலை முத்துசெல்வன் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து செல்வபுரம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சொக்லெட் என நினைத்து எலி மருந்தை தின்று சிறுவன் பலியான சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (2)

# இங்குருவத்தே சுமங்கல தேரரின் உண்ணாவிரதத்தை குழப்ப முயற்சி!



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அமெரிக்கப் பிரஜாவுரிமை நீக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மூன்று நாட்களுக்குள் நாட்டுக்கு தெரியப்படுத்துமாறு கோரி கலாநிதி இங்குருவத்தே சுமங்கல தேரரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தை சிலர் குழப்ப முற்பட்டதாக குறிப்பிட்டு அவர்களின் செயற்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தின் முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 100 பேர் வரை இணைந்துகொண்டனர்.

இதன்போது இவர்கள் கோத்தபாயவின் பிரஜாவுரிமை தொடர்பில் நாட்டுக்கு அறிவிக்குமாறும், இந்தவிடயம் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருப்பதாகவும் எழுதப்பட்ட பதாகைகளை கைகளில் ஏந்தியிருந்தனர். (இ-7)

## 16 ஆம் திகதி காலை

# தோட்டத் தொழிலாளர்களுக்கு விடுமுறை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் தினத்தன்று காலை வேளையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பவ்ரல் அமைப்பு தோட்ட நிர்வாகத்திடம் கேட்டுக்கொண்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு அன்றைய தினம் மாலை விடுமுறை வழங்குவது வாக்களிப்பதற்கு சிரமமாக அமையும் என பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 16 ஆம் திகதி இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# போதைப்பொருட்களுடன் களியாட்டம் 22 பேர் பொலிஸாரால் கைது

(கஹாகல்ல)

ஹெரோயின் மற்றும் போதை மாத்திரைகள் உள்ளிட்ட விச போதைப்பொருட்களுடன் களியாட்டத்தில் ஈடுபட்ட 22 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு பெந்தொட்டை - கஹாகல்ல பகுதியில் இடம் பெற்றது.

குறித்த சந்தேக நபர்கள் 19 - 48 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரிவித்துள்ள பொலிஸார், பெந்தொட்டை, கொஸ்கொட, அஹுங்கல்ல, பேருவளை, ஹற்றன் மற்றும் தொஹியத்த கண்டி ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

சந்தேக நபர்களைப் பலப்பிட்டிய நீதவானிடம் ஆஜர்படுத்தியதையடுத்து ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேக நபரை மூன்று மாத காலத்திற்கு பூசா புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை கஞ்சா வைத்திருந்த ஆறு சந்தேக நபர்களுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டது. மேலும் போதை மாத்திரைகள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 13 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மேலும் இரு பிரதான சந்தேக நபர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# பிரதேச சபை உறுப்பினர் மீது தாக்குதல்; உள்ளிட்ட ஐவர் கைது

(மஹியங்கனை)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் றிதிமாலியத்தை பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட ஐவர் மஹியங்கனை பொலிஸாரால் நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)



யாழ்ப்பாணம் நெடுங்குளம் பிள்ளையார் கோவில் வீதி விரிவாக்கல் பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாநகர சபை பிரதி முதல்வர் து. ஈசனின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் கலந்து கொண்டார்.

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இரண்டக நிலை

ஒருத்தர் இருந்தார். அவர் வீட்டுக்கு ஒரு நாள் போயிருந்தேன். அவர் ஒரு மாதிரியான ஆசாமி. எந்த மாதிரி என்று கேட்கிறீர்களா?

இதை தொடர்ந்து படித்து புரிந்து கொள்வீர்கள்! நான் போன சமயத்திலே அவருக்கு முன்னால் ஒரு தட்டிலே வாழைப்பழம். இன்னொரு தட்டிலே அப்பிள் பழம் இருந்தது. இவர் பாட்டுக்கு சும்மா இருந்திருக்கின்றார்.

"ஏன் சும்மா உட்கார்ந்திருக்கிறீர்கள்? சாப்பிட வேண்டியது தானே!" என்றேன். "சாப்பிட வேண்டியதுதான்! எதை சாப்பிடுவது என்று தெரியவில்லை!"அதுதான் யோசித்துக் கொண் டிருக்கின்றேன்! என்றார். அவை இரண்டிலே உங்களுக்கு எது பிடிக்கும்? என்று கேட் டேன். "இரண்டுமே பிடிக்கும்" என்றார். "அதுதான் இப்ப யோசனை! எதை முதலில் எடுப்பது? என்று யோசித்துக் கொண்டிருக்கின்றேன்!" என்றார்.

அந்தச் சமயத்திலே அவருடைய சம்சாரம் அந்தப் பக்கம் வந்தார். "இவர் எப்பவுமே இப்படித்தான்! எதை தேர்ந்தெடுக்கிறது என்று ஒரு முடிவுக்கு வருவதற்குள்ளே அந்த இரண்டு பழங்களும் அழுகிப் போய்விடும். அதற்குப் பின் நான் சுலபமாக ஒரு முடிவுக்கு வந்துவிடுவேன். அதன்படி நடந்து கொள்வேன்! என்றார்.

"என்ன செய்வீர்கள்? என்று கேட்டேன்". "அழுகிப் போன அந்த இரண்டு பழங்களையும் எடுத்து குப்பைத் தொட்டியிலே போட்டு விடுவேன்!"என்றார். ஏன் அந்தக் காரியத்தை அவரே செய்ய மாட்டாரா? " என்றேன்.

"செய்வார்! ஆனால் அதிலேயும் ஒரு சிக்கல்! இவர் எடுத்துக் கொண்டு அங்கே போனால். அங்கே இரண்டு குப்பைத் தொட்டிகள் இருக்கும். எந்தத் தொட்டியிலே போடுவது என்று யோசித்துக் கொண்டே இருந்து விடுவார்! என்றார்.

இது மாதிரி ஆசாமிகளைப் பற்றி இன்று ஒரு தகவலிலே கொஞ்சம் சொல்லக்கூடாதா? என்றும் அந்த அம்மா கேட்டுக் கொண்டார். அதனுடைய விளைவுதான் இது. இதுமாதிரி ஒரு நிலைமையைத்தான் Dilemma என்று சொல்கிறார்கள். அதாவது இரண்டக நிலை.

அந்த ஆள் ஒரு "இரண்டும் கெட்டால் என்று சொல்கிறோம் அல்லவா. அதுதான் இது! சரியாக ஒரு முடிவுக்கு வரமுடியாததனாலே அந்த அப்பிள், வாழைப்பழம் இரண்டும் கெட்டுப் போச்சல்லவா!அப்படி இரண்டு சந்தர்ப்பத்தையும் கெடுத்துக்கிறவன் இரண்டும் கெட்டான்.

எங்களிலும் பல பேருக்கு இந்தப் பட்டம் பல சமயங்களில் பொருந்தும். இரண்டக நிலை ஏற்படுவதற்கு எப்பொழுதும் நாம் தான் காரணம் என்று சொல்லிவிட முடியாது.

சூழ்நிலையே அப்படி அமைந்துவிடும். இப்பொழுது உங்களையே எடுத்துக் கொள்வோமே! நீங்கள் இந்த இரண்டக நிலைக்கெல்லாம் உட்படாத ஒரு ஆள் என்று வைத்துக் கொள்வோம். மிகவும் ஸ்டெடி. நீங்கள் தனியாக ஒரு காட்டு வழியாக சென்று கொண்டிருக்கின்றீர்கள். அப்பொழுது ஒரு திருடன் உங்கள் முன்னால் வந்து நிற்கின்றான். அவன் கையிலே ஒரு குச்சி இருக்கு! ஒரு சாட்டையும் இருக்கு! அவன் உங்களைப் பார்த்து "குச்சியாலே அடிக்கவா? சாட்டையாலே அடிக்கவா? என்று கேட்கிறான்.

நீங்கள் என்ன பதில் சொல்லுவீர்கள். அது மாதிரி நிலைதான் இரண்டக நிலை. அதாவது நமக்கு முன்னால் இருக்கிற மாற்று வழியிலே அல்லது விடயங்களிலே, எதைத் தெரிவு செய்வது என்று நாம் திண்டாடினால் அதுதான் Dilemma.

இரண்டும் கெட்ட நிலை என்று சொல்கின்ற பொழுது பொதுவாக எங்கள் முன்னால் உள்ள இரண்டு விடயமும் கெட்டது என்று சொல்லுவார்கள். ஆனால் தர்க்க இயல்பே அப்படி இல்லையாம். இரண்டக நிலை என்பது நல்ல விடயங்களிலேயும் வரலாம் என்று தர்க்க வியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள்.

இப்பொழுது ஒரு பையன். அவனுக்கு பெண் பார்த்துக் கொண்டு இருப்பார்கள். ஒரு ஊரில் பார்த்த பெண்ணும் பிடித்திருக்கின்றது.வேறு ஒரு ஊரில் பார்த்த பெண்ணும் பிடித்திருக்கின்றது.ஆனால் ஒரு பெண்ணைத் தானே திருமணம் செய்ய வேண்டும். யாரைத் தெரிவு செய்வது?

இதுவும் ஒரு இரண்டக நிலை தான். இது மாதிரி நிலைமையிலே என்ன செய்யலாம்? இருக்கவே இருக்கு பூவா தலையா? போட்டுப் பார்க்க வேண்டியது தான். இல்லை என்றால் சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்துவிட வேண்டியது தான்.

கல்யாணத்தைப் பற்றி ஒரு பழமொழி உண்டு. அதாவது திருமணம் என்பது ஒரு கோட்டை. உள்ளே இருப்பவர்கள் வெளியே வருவதற்கு ஆசைப்படுகிறார்கள்.வெளியே இருப்பவர்கள் உள்ளே போக ஆசைப்படுகிறார்கள். இதுக்கு என்ன அர்த்தம். திருமணம் செய்து கொண்டாலும் கஷ்டம். செய்து கொள்ளவில்லை என்றாலும் கஷ்டம். ஆனால் ஒரு மனிதன் இரண்டு நிலைகளிலே ஏதாவது ஒன்றிலே தான் இருக்க வேண்டும்.

இது மாதிரி Dilemma வுலே பல நாட்களாக இருந்துகொண்டிருந்த சிநேகிதன் ஒருத்தனை அண்மையில் பார்த்தேன்.

"ஏம்பா..இப்ப நீ கோட்டைக்கு உள்ளே இருக்கிறாயா? வெளியே இருக்கிறாயா? என்று கேட்டேன். அவன் மெதுவாக "கோட்டை மதில் சுவருக்கு மேலே உட்கார்ந்திருக்கிறேன்!" என்றார். எந்தப் பக்கம் குதிக்கப் போகிறானோ? யாருக்குத் தெரியும்?

# ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ் சுயாதீனக் குழுவின் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

**ஜனாதிபதித் தேர்தலை மக்கள் எவ்வாறு கையாள்வது? என்பது தொடர்பில் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்தி ஒருமித்த கருத்தை ஏற்படுத்துகின்ற நோக்கில் உருவாக்கப்பட்ட சுயாதீனக்குழு தனது பணிநிலை தொடர்பில் விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. தமிழ்மக்கள்பேரவையால் அமைக்கப்பட்ட சுயாதீனக்குழுவில் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா, யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.ரி.ஜெபரட்ணம், தென் கயிலை ஆதீன சுவாமி அகத்தியர், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல், அருட்திரு ஜெயக்குமார் அடிகளார், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், சட்டத்தரணி அ.ஜோதிலிங்கம், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி கு.குருபரன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் , மருத்துவர் சிவபாலன், ஓய்வு பெற்ற காணி உத்தியோகத்தர் குருநாதன், அருட்திரு சக்திவேல் அடிகளார், சமூக செயற்பாட்டாளர் கஜன் ஆகியோர்சுயாதீனக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.**

மேற்படி சுயாதீனக்குழுவானது விடுத்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு.

தமிழ் மக்கள் பேரவையால் தொடக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கான சுயாதீனக் குழு எனப்படுவது தமிழ் அரசியலின் மீதும் தமிழ்க் கட்சித் தலைமைகளின் மீதும் சிவில் சமூகங்களின் தார்மீகத் தலையீட்டைக் குறிக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் எனப்படுவது முழு நாட்டுக்குமானது. இதில் தமிழ்-முஸ்லிம் வாக்குகள் வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்குகளாகக் காணப்படுவதைச் சுயாதீனக் குழு அவதானித்தது.

தென்னிலங்கையில் யார் ஜனாதிபதியாக வரவேண்டும் என்பதனைத் தீர்மானிக்க முற்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தரப்புக்கள் தமிழ்த் தரப்போடு தொடர்ந்து இடையூடாடி வருவதை சுயாதீனக் குழு கவனத்தில் எடுத்தது.

எனவே தமிழ் மக்கள் தமது பேரத்தை உயர்வாகப். பேணி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்புக்களோடு பேரம் பேசும் ஒரு களமாக ஜனாதிபதித் தேர்தலைக் கையாள வேண்டும் என்று சுயாதீனக்குழு விரும்பியது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பேரத்தை பிரயோகிப்பதற்கு ஒருபொதுத் தமிழ் வேட்பாளரே இருப்பவற்றுள் பொருத்தமான, உச்சமான தெரிவு என்று சுயாதீனக் குழு முடிவெடுத்தது. அவ்வாறு ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது என்றால், அதற்கு தமிழ்க் கட்சிகளுக்கிடையே ஒரு பொதுக் கருத்து எட்டப்பட வேண்டும் என்றும் குழு தீர்மானித்தது.

ஒரு பொதுத் தமிழ் வேட்பாளர் எனப்படுபவர் ஒரு குறியீடு. அவர் தமிழ் மக்களின் இலட்சியங்களின் குறியீடு. தமிழ் மக்கள் ஒரு தேசமாகச் சிந்திக்கிறார்கள் என்பதன் குறியீடு. தமிழ் மக்கள் பேரம் பேசத் தயாராகி விட்டார்கள் என்பதன் குறியீடு. தமிழ் ஐக்கியத்தின் குறியீடு.

ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தினால் அவர் தமிழ் மக்களின் முதலாவது விருப்பு வாக்கைப் பெறுவார். அவ்வாறு ஒரு பொதுத்தமிழ்வேட்பாளரும்ஜே.வி.பியும் தமிழ்- சிங்கள வாக்குகளைக் கொத்தாக வெட்டி எடுக்கும் போது இரண்டு பிரதான வேட்பாளர்களும் 50 வீதத்திற்கு மேலான வாக்குகளைப் பெறுவது சில சமயம் சவால்களுக்கு உள்ளாகலாம். அப்பொழுது இரண்டாவது விருப்புவாக்கு எண்ணப்படும்.

இதில் தமிழ் மக்கள் தமது இரண்டாவது விருப்பு வாக்கை தந்திரோபாயமாகச் சிந்தித்து யாருக்கு வழங்குகிறார்களோ அந்தப் பிரதான வேட்பாளருக்கே வெற்றி வாய்ப்புக்கள் அதிகமிருக்கும். அதாவது முதலாவது விருப்பு வாக்கு தமிழ்க் கொள்கைக்கு. இரண்டாவது விருப்பு வாக்கு பேரம் பேசலுக்கு.

இதுதான் பொதுத் தமிழ் வேட்பாளர். இக் கோரிக்கையை முன்வைத்து கட்சிகளை ஒருங்கிணைக்கும்அனுசரணைப்பணியை சுயாதீனக்குழு முன்னெடுத்தது.

முதலில் இக்குழு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்தது. அதன் தலைவர் இரா.சம்பந்தன் குழுவின் யோசனையை உதாசீனம் செய்யவில்லை என்று கூறினார். கட்சித் தலைவர்களோடும் தொண்டர்களோடும் பேசி முடிவெடுத்த பின் தமது முடிவைக் கூறுவதாகச் சொன்னார். பொதுத் தமிழ் வேட்பாளராக தான் களமிறங்கத் தயாரில்லை என்றும் அவர் கூறினார்.

அதன்பின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைக் குழு சந்தித்தது. அவர்கள் பொதுத் தமிழ் வேட்பாளரை எடுத்த எடுப்பில் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக தேர்தல் புறக்கணிப்பை தமது முதல் தெரிவாக அவர்கள் முன்வைத்தார்கள்.

அதன்பின் தமிழ் மக்கள் கூட்டணியை குழு சந்தித்தது. நீண்ட உரையாடலின் பின் பொதுத் தமிழ் வேட்பாளரை அக்கட்சி ஏற்றுக்கொண்டது. எனினும் விக்னேஸ்வரன் அப்படி ஒரு வேட்பாளராகக் களமிறங்குவதற்கு மறுத்து விட்டார். அதே சமயம் இரா.சம்பந்தன் களமிறக்கப்பட்டால் அதைத் தான் ஆதரிப்பதாகவும் அவர் கூறினார்.

அதன்பின் ஈ.பி.ஆர்.எல்.எப்.கட்சியைக் குழு சந்தித்தது. அதன் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் பொதுத்தமிழ் வேட்பாளரை ஏற்பதற்குத் தயங்கினார். பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களோடு முதல்நிலைக் கோரிக்கைகளை முன்வைத்துப் பேசுவது கடினம் என்றும் எனவே உடனடிப் பிரச்சினைகளை முன்வைத்துப் பேசவேண்டும் என்றும் அபிப்பிராயப்பட்டார்.

அதன்பின் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தைக் குழு சந்தித்தது. அதன் தலைவர் பொ.ஐங்கரநேசன் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை உடனடியாக ஏற்றுக் கொண்டார். அந்த வேட்பாளருக்கு தமது கட்சி முழு மனதோடு உழைக்கும் என்றும் உறுதியளித்தார்.

அதன்பின் திருமதி. அனந்தி சசிதரன். அவரும் பொது வேட்பாளரை ஏற்றுக்கொண்டார். எம்.கே. சிவாஜிலிங்கம் சிலசமயம் போட்டியிடக் கூடும் என்றும் ஊகம் தெரிவித்தார்.

அதன்பின் தமிழரசுக் கட்சி. அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தனது கட்சித்தலைவர்களுடன் கலந்தாலோசித்தபின் முடிவை அறிவிப்பதாகத் தெரிவித்தார்.

அதன்பின் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன். அவரும் பொது வேட்பாளரை ஏற்றுக் கொண்டார். ஆனால் காலம் பிந்தி விட்டது என்று சொன்னார். அதன்பின் ரெலோ அமைப்பின் செயலாளர் என்.சிறீகாந்தா. அவரும் பொது வேட் பாளரை ஏற்றுக் கொண்டார். ஆனால் காலம் பிந்தி விட்டது என்ற ஏற்றுக் கொள்ளத்தக்க ஒருசாட்டை எல்லாக் கட்சிகளும் முன்வைக்கும் என்று சொன்னார்.

இவ்வாறு கட்சித் தலைமைகளோடு பேசி ஒரு பொது உடன்பாட்டுக்கு வரும் முதல் முயற்சியில் சுயாதீனக் குழு ஓரளவுக்கு முன்னேறியிருந்த பின்னணி யில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை கட்சிகளுக்குள் இருந்தும் கட்சிகளுக்கு வெளியே இருந்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. கட்சிகளுக்கு வெளியே ஒருவரை கண்டுபிடிப்பதென்றால் அவர் ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும்.

இவ்வாறான ஒரு பின்னணியில் தான் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது முயற்சியை ஆரம்பித்தார்கள். அதேகாலப் பகுதியில் எம்.கே. சிவாஜிலிங்கம் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரைக் கண்டுபிடிக்க முடியாத ஒரு சூழலில் அடுத்த கட்டமாக எல்லாக் கட்சிகளையும் ஒருங்கிணைத்து ஒரு பொது உடன்பாடுக்குக் கொண்டு வந்து ஒரு பொதுப் பேரம்பேசும் ஆவணத்தைத் தயாரிப்பதே சுயாதீனக் குழுவின் அடுத்தகட்டத் திட்டமாயிருந்தது.

ஆனால் பல்கலைக்கழக மாணவர்கள் இடையில் நுழைந்தார்கள். சுயாதீனக் குழு திட்டமிட்டிருந்த அடுத்தகட்ட நகர்வை அவர்கள் முன்னெடுத்தார்கள். அதன் விளைவாக ஐந்து கட்சிகளின் கூட்டும் ஒரு பொது ஆவணமும் உருவாக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது அக்கூட்டு சிதைந்து விட்டது. அதன் சிதைவைத் தடுக்க மாணவர்களால் முடியவில்லை.

பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட முயற்சிகளில் சுயாதீனக் குழு உத்தியோகப் பற்றற்ற விதத்தில் பங்குபற்றியது. ஆனால் ஐந்து கட்சிகளின் கூட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு பொதுக் கருத்தை எட்டுவதற்கு எல்லாக் கட்சிகளையும் ஒருங்கிணைக்கவேண்டும் என்பதே அக்குழுவின் நிலைப்பாடாக இருந்தது.

இப்போதுள்ள நிலைமைகளின் படி தமிழ்த் தேசிய கட்சிகள் மத்தியில் நான்கு வேறு நிலைப்பாடுகள் உண்டு. முதலாவது - பொதுத் தமிழ் வேட்பாளர் (அதாவது இரண்டாவது விருப்பு வாக்கை ஒரு பிரதான வேட்பாளருக்கு நிபந்தனையுடன் வழங்குவது). இரண்டாவது - தேர்தலைப் புறக்கணிப்பது. மூன்றாவது - சஜித்தை நிபந்தனையின்றி ஆதரிப்பது. நான்காவது - தமிழ் மக்களைத் தாமாக முடிவெடுக்க விடுவது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஒரு பொதுத் தமிழ் கருத்தை உருவாக்க முடியவில்லை. எனவே தமிழ்ப் பேரத்தையும் முழுமையாக பிரயோகிப்பது கடினம்.

ஒருபொதுத் தமிழ் வேட்பாளரே சுயாதீனக் குழுவின் கொள்கைத் தெரிவு. அதற்கு ஒப்பீட்டளவில் ஆகக்கூடிய பட்சம் பொருத்தமான ஓர் ஒற்றுமை அவசியம். அவ்வாறு ஒப்பீட்டளவில் ஆகக் கூடுதலான தமிழ்த் தேசியக் கட்சிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தமிழ் வேட்பாளருக்கு தமிழ் மக்கள் தமது முதல் விருப்பு வாக்கையும் இரண்டாவது விருப்பு வாக்கை தந்திரோபாயமாகச் சிந்தித்தும் வழங்கலாம்.

கொள்கை அடித்தளம் இல்லாமல் கட்சிகளை ஒருங்கிணைப்பது தற்காலிகமானது. செயற்கையானது என்று சுயாதீனக் குழு் நம்புகிறது. தலைவர்களையும் வாக்காளர்களையும் நீண்ட கால நோக்கில் பண்படுத்தி வளர்த்தெடுக்கவேண்டும் என்ற அவசியத்தையும் சமூகப் பொறுப்பையும் சுயாதீனக் குழு ஏற்றுக்கொள்கிறது.

தமிழ் அரசியலில் சிவில் சமூகங்கள் தலையிடுவது என்பது தமிழ் ஜனநாயகத்தை மேலும் செழிப்பாக்கும். இனிவரும் காலங்களில் தமிழ் அரசியலின் மீதும் கட்சிகளின் மீதும் அதிகரித்த தார்மீகத் தலையீட்டைச் செய்வதற்கு தேவையான வளர்ச்சியைத் தமிழ் சிவில் சமூகங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முகநூலில் இடம்பெறும் பிரசாரத்தை எவ்வாறு கையாளப்போகின்றீர்கள்?

## நிர்வாகியிடம் பவ்ரல் கேள்வி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் பின்னர் இரண்டு நாட்கள் அதாவது நாளை வியாழக்கிழமையும் நாளை மறு தினம் வெள்ளிக்கிழமையும் எவ்வாறு முக நூலில் இடம்பெறும் பிரசாரத்தைக் கட்டுப்படுத்தி கையாளப் போகின்றீர்கள் எனவும் இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றீர்கள் எனவும் ப்வ்ரல் அமைப்பு முகநூல் நிர்வாகியிடம் கேள்வியெழுப்பி உள்ளது.

32 வருடங்களாக இலங்கையில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்காக மக்கள் செயற்பாட்டு அமைப்பான பவ்ரலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி முகநூல் நிர்வாகியிடம் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

இலங்கை தேர்தல்கள் சட்டத்தில் தேர்தல் இடம்பெறவுள்ள தினத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர் அனைத்துத் தேர்தல் பிரசாரங்களும் ஓய்வுக்கு கொண்டுவரப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட 48 மணிநேரமும் அமைதிக் காலமாக அனுசரிக்க வேண்டு மெனவும் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இவ் அமைதிக் காலத்தில் முகநூலில் இடம்பெறும் ஜனரிபதித் தேர்தல் பிரசாரத்தைக் கட்டுப்படு த்தி கையாளுமாறு முகநூல் நிர் வாகியைக் கேட்டுக் கொள்கி றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிள்ளையானுக்கு முக்கியத்துவம் கொடுக்கக் காரணம் என்ன?

## மகிந்த அணியிடம் சம்பந்தன் கேள்வி

(ஏறாவூர்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பரராஜசிங்கம், ரவிராஜ் போன்றவர்களின் கொலைகளுக்கு இதுவரை எந்தப் பதிலும் இல்லை எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், மகிந்த அணியினர் பிள்ளையானுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதற்கான காரணம் என்ன? எனவும் கேள்வி எழுப்பினார். மட்டக்களப்பு கல்லடி துளசி மண்டபத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 2005 ஆம் ஆண்டு வடக்கு,கிழக்கு தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்ததன் விளைவாக மகிந்த வெற்றி பெற்றார். 2005 தொடக்கம் 2015 வரை எமது மக்கள் பட்ட துயரங்கள் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.



அவ்விதமான நிலைமை மீண்டும் ஏற்பட்டு விடக்கூடாது. எமது ஜனநாயக முறையைப் பயன்படுத்தி அர்த்த புஷ்டியுடன் எமது இலக்கை அடையக் கூடிய விதத்திலே புதிதாகத் தெரிவு செய்யப்படுகின்ற ஜனாதிபதி பக்குவமானவராக, துவேசத்தின் அடிப்படையில் சிந்திக்காதவராக எமக்கு உதவ வேண்டியவராக இருக்க வேண்டும். அது தான் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் எமக்கு உணர்த்திய பாடம். நடைபெறவுள்ள தேர்தலில் சிங்களப் பிரதேசங்களில் கடுமையான போட்டி நிலவுகின்றது. தமிழ் மக்களின் வாக்குகளில் முடிவு தங்கியுள்ளது என்ற கருத்தும் நிலவுகின்றது. எமது மக்கள் தெளிவாக முடிவெடுத்து செயற்பட வேண்டும்.

தமிழ் மக்களை அடிமைகளாக வைத்திருப்பதற்காக, தமிழ் மக்களை அடக்குவதற்காக இவ்வாறான சிந்தனை கொண்டு செயலாற்றுகின்றவர்களை நாங்கள் ஆதரிக்க முடியுமா? மாணவர்கள், ஊடகவியலாளர், அரசியல்வாதிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சாதாரண பொதுமக்கள் எனப் பலரும் கொலை செய்யப்பட்டார்கள். இச்சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்றனவா? 13 ஆவது திருத்தத்தை மாற்றி அதிகாரத்தைக் குறைப்பதற்கு முயற்சித்தார்கள்.

எமது செயற்பாடுகளால் அது தடுக்கப்பட்டது. இவ்விதமான ஒருவர் நமக்கு முறையான அரசில் தீர்வினைத் தருவாரா? அதியுச்ச அதிகாரப் பங்கீட்டுடன் நான் அரசியல் தீர்வினைத் தருவேன் என்று அவரது விஞ்ஞாபனத்தில் கூறியிருக்கின்றாரா? அரசியல் தீர்வு சம்பந்தமாக எதையும் சொல்லியிருக்கின்றாரா? அவ்வாறான ஒருவருக்கு நாங்கள் எவ்வாறு வாக்களிக்க முடியும். நீங்கள் என்னவிதமான அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றீர்கள் என்று தேர்தல் அறிவிப்பின் பின் சஜித் பிரேமதாஸவை நான் சந்தித்த போது என்னிடம் கேட்டார். தங்கள் தந்தை சொன்னார் என்னால் ஈழம் தர முடியாது. ஆனால் ஈழத்தைவிட எல்லாம் தருவேன் என்று. நான் சொன்னேன் அதேபோன்று இன்று நாங்கள் ஈழத்தைக் கேட்கவில்லை. எல்லாம் கேட்கின்றோம். அதியுச்ச அதிகாரப் பங்கீட்டைக் கேட்கின்றோம்.

எமது மக்கள் தங்கள் சொந்தப் பிரதேசங்களில் தாங்களின் தீர்மானத்தை நிறைவேற்ற அமுல்படுத்தக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். கல்வி, உயர்கல்வி, சுகாதாரம், காணி, பாதுகாப்பு, பொலிஸ் அதிகாரம், விவசாயம், நீர்ப்பாசனம், கைத்தொழில், கடற்றொழில், கால்நடை போன்ற மக்கள் வாழ்வோடு சம்பந்தப்பட்ட விடயங்களின் அதிகாரம் பங்கீடு செய்யப்பட்டு. எமது மக்களால் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்படும் தலைவர்களால் அந்த விடயங்கள் சம்பந்தமாக சட்டத்தை ஆக்குகின்ற, நிர்வகிக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி உறுதியான வகையில், நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வகையில் அந்த அதிகாரப் பங்கீடு இருக்க வேண்டும்.

அதுதான் எமது நிலைப்பாடு. அந்தப் பயணத்தை நோக்கி நாங்கள் நியாயமான தூரம் பயணித்து விட்டோம். 2018 ஒக்டோபர் குழப்பம் ஏற்பட்டிருக்காவிட்டால் எம்மால் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் சாசனம் முழுமை அடைந்திருக்கும். அதனைக் குழப்புவதற்காகத்தான் அதற்கு தாமதத்தை ஏற்படுத்தி குழப்பத்தை உருவாக்கினார்கள். அதனை நிறைவேற்றும் ஜனாதிபதி வர வேண்டும். யார் அந்த ஜனாதிபதி? சஜித் பிரேமதாஸவா? கோத்தபாய ராஜபக்ஷவா? எல்லோரும் ஒற்றுமையாகச் சேர்ந்து, வாக்களித்து சஜித் பிரேமதாஸவை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பலத்த பாதுகாப்புத் திட்டம்!

❖60,000 பொலிஸார், 8,000 சிவில் பாதுகாப்புப்படையினர் களத்தில்

❖தேவையேற்படின் ஆயுதங்களைப் பயன்படுத்தவும் ஆலோசனை

(கொழும்பு)



இலங்கையின் 8 ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலின் வாக்குப் பதிவுகள் எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், அது தொடர்பிலான பூரண பலத்த பாதுகாப்பு திட்டமொன்றை பொலிஸ் திணைக்களம் தயார் செய்துள்ளது.

60 ஆயிரத்து 175 பொலிஸார் மற்றும் 8 ஆயிரத்து 80 சிவில் பாதுகாப்பு படையினரை உள்ளடக்கியதாக இந்த விசேட திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் குறித்த அனைத்து கடமைகளையும் இந்த படையினரை வைத்து முன்னெடுக்க பூரண திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் இது குறித்து விசேட செய்தியாளர் சந்திப்பை நேற்று நடத்தியே ருவான் இதனை தெரிவித்தார்.

அத்துடன் இந்த பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினருக்கு மேலதிகமாக எஸ்ரி.எப். எனப்படும் பொலிஸ் விசேட அதிரடிப்படை அனைத்து பகுதிகளிலும் தயார் நிலையில் உள்ளதாகவும் அவர்கள் எந்த வேளையிலும் எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். அத்துடன் வாக்களிப்பு மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களின் பாதுகாப்பின் போதும், ஏனைய பாதுகாப்பு திட்டங்களை அமுல் செய்யும் போதும் தேவை ஏற்படின் ஆயுதங்களை பயன்படுத்தவும் பலப்பிரயோகம் செய்யவும் தெளிவான ஆலோசனை பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (இ-7)

# குகதாஸை ரி.ஐ.டி.விசாரணைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.குகதாஸை ரி.ஐ.டி.விசாரணைக்கு அழைத்துள்ளது.


கொழும்பிலுள்ள பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவின் 2 ஆம் மாடிக்கு இன்று புதன்கிழமை வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியிலுள்ள அவரது வீட்டிற்குச் சென்ற பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணைக்கான அழைப்பாணை கடிதத்தை அவரிடம் கையளித்தனர்.

அந்த அழைப்பாணையில் வாக்குமூலம் ஒன்றினைப் பெறுவதற்கு சமுகமளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-101)


தேர்தல் காலங்களில் பொதுச் சொத்துக்கள் முறையற்ற வகையில் பயன்படுத்துவது தொடர்பாக அவதானமாக இருப்போம்

நீங்கள் ஒரு அரச ஊழியரா?



எந்தவொரு வேட்பாளரினதும் தேர்தல் நடவடிக்கைகளுக்காக தமது கடமைகளை செய்யாதிருக்கவும், அரச நிறுவனங்களின் உடமைகளை கையாள்வதற்கும் இடமளிக்காதிருப்பதையும் உறுதிப்படுத்துங்கள்.





தேர்தல் காலங்களில் பொது சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பாக நீங்கள் அறிவீர்களானால் தகுந்த சாட்சிகளுடன் எமக்கு அறிவியுங்கள். (சகல தகவல்களும் இரகசியமாக பேணப்படும்)

பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் வேலைத்திட்டம்.
ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா
5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு 05
தொலைநகல்: 011 2501707 மின்னஞ்சல்: pppr@tisrilanka.org

உடனடி அழைப்புகளுக்கு
076 322 3442 076 322 3662

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

(C-8208)

தேர்தல் காலங்களில் பொது சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்

# இனவாத வன்செயல்களிலிருந்து விடுபட சஜித்தை ஜனாதிபதியாக்க வேண்டும்

## ஹக்கீம் வேண்டுகோள்

(வரிப்பத்தான்சேனை)

கடந்த கால இனவாத வன்செயல்களை பின்னணியில் இருந்து இயக்கியவர்களிடத்தில் ஆட்சியை ஒப்படைத்தால் எவ்வாறான பாரதூரமான விளைவுகளுக்கு சமூகம் முகங்கொடுக்க நேரிடும் என்பதைப் பற்றிச் சிந்தித்து, அவற்றிலிருந்து விடுபடுவதற்காக சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களியுங்கள் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீம் வேண்டுகோள்விடுத்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து தேர்தல் பிரசாரக் கூட்டம் திகாமடுல்லை மாவட்டத்தில் வரிப்பத்தான்சேனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸ களமிறக்கப்பட்ட பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பழைமை வாய்ந்த கொள்கையுடன் இனியும் புரட்சிகரமாக பயணிக்க முடியாது என விலகிச் சென்றவர்கள் பலரும் இப்போது அக்கட்சிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்கள். அவ்வாறே முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலகிச் சென்றவர்கள் பலரும் மீண்டும் கட்சியுடன் வந்து இணைந்துள்ளார்கள்.

ஏனென்றால் எமது இளம் ஜனாதிபதி வேட்பாளரது ஆளுமை அவர்களுக்கு புதியதொரு நம்பிக்கையும் உற்சாகத்தையும் ஊட்டியுள்ளது. இரவும் பகலும் மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணித்த ஒருவராகவும் நேர்மையான தலைவராகவும் அவர் திகழ்வதால் மக்கள் அவரை ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்நாட்டில் வாழும் முஸ்லிம்கள் என்ற அடிப்படையில் கடந்த சில வருடங்களாக நாம் சந்தித்து வரும் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு எமக்கு மாற்றுத் தெரிவுகள் இருக்க முடியாது. எதிரணியிலுள்ள இனவாதக் கும்பலின் சுயரூபத்தைப் பார்க்கின்ற போது மிகக் கவனமாகவும் பக்குவமாகவும் இந்தத் தேர்தலை அணுக வேண்டியுள்ளது.

ஏப்ரல் 21 ஆம் திகதி இடம் பெற்ற அசம்பாவிதத்திற்கு பிறகு முஸ்லிம்களை படுமோசமாக விமர்சிக்கின்றனர். மிகவும் ஆழமாக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகவே இது அமைகின்றது. இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருப்பவர்கள் அனைவரும் மொட்டுக் கட்சியுடன் சங்கமித்து, இரண்டறக் கலந்து ஒரே மேடையில் ஒன்றாக நிற்கின்றனர்.

எங்களுடைய அரசாங்கக் காலத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தை எண்ணி நாங்கள் விசனப்படுகின்றோம். முஸ்லிம்கள் தான் தங்களை ஆட்சியிலிருந்து விரட்டியடித்தனர் என்பதற்காகவே எதிர்வரும் தேர்தலில் முஸ்லிம்களையே இந்த அரசாங்கத்தை வெறுக்க வைப்பதற்காக இவை அனைத்தும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நாடகங்களாகும்.

ஆனால், நாங்கள் அரசாங்கத்தில் இருந்துகொண்டு சும்மா இருக்காது அன்று அம்பாறை இன வன்செயலில் ஈடுபட்ட கும்பலில் ஏராளமானவர்களை கைது செய்ய வைத்தோம். பிணை வழங்காமல் அவர்களை மாதக் கணக்கில் அரசாங்கம் சிறையில் வைத்தது. சட்டமும் ஒழுங்கும் உரிய முறையில் நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தோம்.

அதேபோல் திகனயில் கலவரம் செய்த 150 இற்கும் மேற்பட்டவர்கள் சிசிரிவி கமராக்களின் மூலம் அடையாளம் காணப்பட்டு ஊர் ஊராக தேடிச் சென்று கைது செய்யப்பட்டார்கள். அரசாங்கமும் அவர்களுக்கு பிணை வழங்காமல் வழக்குத் தொடர நடவடிக்கைகளை மேற்கொண்டது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் தவித்த கும்பல் வாக்கெடுப்பைத் தடுப்பதற்காக செய்த அட்டூழியங்களை எனது 25 வருட அரசியல் வாழ்க்கையில் நான் அனுபவித்ததே இல்லை. ஆட்சியை பின் கதவால் வந்து பிடித்தவர்கள் தான் இப்பொழுது முன் கதவால் ஆட்சியை அடைய எத்தனிக்கின்றார்கள். இவர்களிடத்தில் ஆட்சியையும் பெரும்பான்மையையும் ஒப்படைத்தால் இன்னும் என்னவெல்லாம் நிகழும் என்பதை எண்ணிப் பார்க்கவே முடியாது.

மாயக்கல்லி மலை விவகாரத்தை எடுத்துக்கொண்டால் எவ்வாறு அந்த கும்பல் சந்தர்ப்பத்தை தமக்கு சாதகமாக மாற்றிக்கொண்டார்கள் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளலாம். அப்பொழுது நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு களத்தில் இறங்கி போராடினாலும் எதுவும் செய்துகொள்ள முடியாமல் போனது. அந்தக் கும்பல் இப்பொழுது ஆட்சியை கைப்பற்றினால் இறக்காமம் மற்றும் வரிப்பத்தான்சேனை பிரதேசங்களில் புதிய குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படும் ஆபத்து நிலவுகின்றது. அப்பிரதேசம் முழுவதுமாக பறிபோகின்ற நிலவரம் உருவாகி ஆக்கிரமிப்புக்குள்ளாக நேரிடும். அதைத் தான் எங்களால் தடுக்க முடியாவிட்டாலும் அது மேலும் வியாபிப்பதற்கு இடமளிக்காமல் தடுக்க எத்தகைய ஆட்சியாளர்களின் கீழ் அதற்கு எதிராக போராட முடியும் என்பதை பற்றி சிந்திக்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

எம்மை சூழவுள்ள பல பிரச்சினைகள் நீண்ட காலமாக தீராமல் இருந்து வருகின்றன.

இவற்றைத் தீர்த்து வைக்குமாறு சஜித் பிரேமதாஸவிடம் வலியுறுத்தியுள்ளோம். நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத பல பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்குரிய நம்பிக்கையை எங்களுக்கு அளித்துள்ளார்.

எனவே, எதிரணியின் பொய்யான பிரசாரங்களை தகர்த்தெறிந்து எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு பின்னர் இந்நாட்டின் ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ வெற்றிவாகை சூடுவார் என்பதற்கான சகல சமிக்ஞைகளும் போகின்ற இடங்களில் தெரிகின்றது.

நிகழவுள்ள இந்த யுக மாற்றத்தை தடுத்து நிறுத்த யாராலும் முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)







Registered as a Newspaper in Srilanka

உங்கள் வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk Viber : 076 636 3378
E-mail : valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
T.P : 021 221 7603 Fax : 021 222 7829

20ஆவது ஆண்டு நிறைவை நோக்கிப் பயணிக்கிறது...

உங்கள் ஆசியும் அரவணைப்பும் இலட்சக்கணக்கான வாசகர் சேவையுடன் 20.12.2019 இல் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. இருபது ஆண்டு காலப் பயணத்தில் நடுவுநிலையுடன் அதிக வாசகர்களைக் கொண்ட, விற்பனையில் முன்னணி என்ற பெருமைகொண்ட ஒரே நாளிதழாக வலம்புரி வியாபகம் பெற்றுள்ளது.

விற்பனையில் சாதனை படைத்திருக்கும் வலம்புரியின் விற்பனைக் கணக்கெடுப்பை வலம்புரி விற்பனை முகவர்களிடம் கேட்டறிந்து கணக்கெடுங்கள். அப்போது உண்மை புரியும்.

இருபது ஆண்டு நிறைவில் உங்கள் வலம்புரி விசேட சலுகைக் கட்டணத்தில்

- மரண அறிவித்தல்
- கண்ணீர் அஞ்சலி
- நினைவஞ்சலி

ஆகிய விளம்பரங்கள் வெளியிடத் தீர்மானித்துள்ளது. தமிழர் தாயகம் எங்கும் வியாபித்துள்ள வலம்புரி 20ஆவது ஆண்டு நிறைவில் இன்னும் புதுப் பொலிவுடன் உங்களைச் சந்திக்கும்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெள்ளைச் சாரணையும்,குப்பைச் சாரணையும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சாரணை மூலிகையானது பொதுவாக கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து நிறைந்த மூலிகையாகும். சாரணையில் வெள்ளைச் சாரணை, குப்பைச் சாரணை என இரு வகையுண்டு. வெள்ளைச் சாரணை அரிதாகப் பரம்பிக் காணப்படுவதும் மருத்துவக் குணங்கள் நிறைந்ததுமாகும். பொதுவாக உலர்ந்த வலயப் பகுதிகளில் இதன் பரம்பல் காணப்படும்.



வெள்ளைச்சாரணை

Botanical Name: Trianthema decandra

Family:Aizoaceae

குப்பைச்சாரணை

Botanical Name: trainthema portulacastrum

Family:Aizoaceae

வெள்ளைச் சாரணையானது தரையில் படர்ந்து வளரக்கூடிய சிறு கிளை கொண்ட வளைந்த தண்டுகளையுடையது. கணுக்களுக்கு இடையே 2.5-9.5 செ.மீ. நீளமுடையது. இலைகள் மினுமினுப்பானதாகவும் தசைப்பற்றானதாகவும் எதிர் எதிர் ஒழுங்கமைப்பு உடையதாகவும் 2-3.7 சென்ரி மீற்றர் நீளமுடையதாகவும் காணப்படும்.

இலைகள் 0.8-2.2 செ.மீ. அகலமானதாகவும் நீள்வட்ட வடிவினதாக நுனி ஒழுங்கியதாகவும் இலைக் காம்பு 0.6-1.2 செ.மீற்றர் நீளமான அடியில் அகன்றதாகக் காணப்படும். பூக்கள் வெள்ளை நிறமானதாக இருக்கும். பழங்களினுள் 4 விதைகள் காணப்படும். மூடியுருவானதாகக் காணப்படும்.

குப்பைச் சாரணையானது நிறைய கிளைகளைக் கொண்டதும் வளைந்தும் காணப்படும். தண்டுகள் மென்மையான ரோம அமைப்பைக் கொண்டது. பூக்கள் மெல்லிய ரோஸ் நிறமுடையதாகவும் ஒழுங்கான சிறிய பூக்களுமாகும்.

இச்செடி புன்னை நில தோட்ட மண்ணின் களைச் செடியாகும். எல்லாவகை மண்களிலும் தானாக முளைத்து வளருவதைக் காணலாம். விதைகளைத் தூவியும் தானாக முளைத்துள்ள சிறுகன்றுகளைப் பிடுங்கி ஒட்டும் வளர்க்கலாம்.

100 கிராம் வெள்ளைச் சாரணையிலுள்ள சத்துக்கள்

புரதம்-6.1 கிராம், கொழுப்பு-0.9 கிராம், காபோவைதரேற்று-7.2 கிராம், கல்சியம் -667 மில்லி கிராம், பொஸ்பரஸ்-99 மில்லிகிராம், இரும்பு-18.4 மில்லி கிராம்.

வெள்ளைச்சாரணை வேர்களைச் சேகரித்து சிறுதுண்டுகளாக வெட்டி கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு வெந்நீரில் எடுக்க விஷங்கள் இறங்கும். அதாவது விஷமகற்றி செய்கை உண்டு. ஆனால் குப்பைச்சாரணை வேருக்கு விஷங்களை அகற்றும் தன்மை இல்லை.

ஆனால் இரண்டு வகைகளையும் கீரையாகவும் மலத்தை இளக்கவும் பயன்படுத்தலாம். பொதுவாக வெள்ளைச் சாரணை வேருக்கு மூட்டுக்களில் ஏற்படும் ஸ்தாபிதத்தையும் வலியையும் வீக்கத்தையும் நீக்கும் ஆற்றல் சிறப்பாக உண்டு.

இரண்டு வகை இலைகளையும் கீரை சமைப்பது போல சமைத்து துவட்டலாக உண்ணலாம். நெய் அல்லது எண்ணெயில் வதக்கிய பின் துவட்டல் செய்ய சுவை மிகும். இக்கீரையை பருப்புடன் அல்லது வேறு கீரைகளுடன் கலந்து சமைத்துண்ண சிறுநீர் தாராளமாக வெளியேறும். மலம் நன்கு வெளிப்படும். உடல் அழகு பெறும். கண் நோய்களுக்கு இக்கீரை சிறந்த நிவாரணியாகும்.

பச்சையாகவும் உலர்த்தியும் சாரணையைப் பயன்படுத்தலாம். செடியை வேருடன் எடுத்து அலசிய பின் இடித்து கிழித்தெடுத்த சாறு 30 மில்லியுடன் தேன் கலந்து காலை, மாலை தொடர்ந்து 40 நாட்கள் அருந்திவர நோய்கள் அணுகுவதில்லை. சாரணை வேரின் குடிநீர்பேதியை உண்டுபண்ணி வயிற்றிலுள்ள புழுக்களை வெளியே தள்ள உதவும்.

சாரணைச் செடியை வேரோடு சேகரித்து வேரை மட்டும் வெட்டி எடுத்து கழுவி கைப்பிடியளவு எடுத்து அம்மியில் வைத்து நைத்து ஒரு சட்டியில் போட்டு ஒன்றரை டம்ளர் அளவு தண்ணீர்விட்டு ஒரு டம்ளர் அளவிற்கு சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதை இரண்டு பங்காக்கி காலையில் ஒரு பங்கும் மாலையில் ஒரு பங்குமாக தொடர்ந்து 3 நாட்கள் அருந்திவர இடுப்புவலி, மூட்டுவலி குணமாகும். மேலும் இலேசான வலி இருந்தால் மேலும் தொடர்ந்து 3 நாட்கள் சாப்பிட குணமேற்படும்.

உலர்ந்த செடியாக இருப்பின் 50 கிராமை எடுத்து நீரில் அலசியபின் கால் லீற்றர் நீரிலிட்டுக் கொதிக்கவைத்து குடிநீர் காய்ச்சி வடிகட்ட வேண்டும். இதனுடன் தேன் கலந்து காலையிலும் மாலையிலும் புதிதாகத் தயார் செய்து அருந்த காமாலை, அஜீரணம், சிறுநீர் கழிக்கையில் ஏற்படும் எரிவு ஆகியவை தீரும்.





கீரையை அலசி நீரை வடிய வைத்து துவரம்பருப்புடன் வேக வைத்து அதனுடன் உள்ளி, வெங்காயம்,பெருங்காயம் போடவும். வெந்ததும் உப்பைப் போட்டு மத்தால் கடையவும். சாதத்தில் போட்டு பிசைந்து உண்டுவர மலச்சிக்கல் தீரும். வீக்கம், காமாலை, வயிற்றுப் புண் தீரும்.

ஆமணக்கம் எண்ணெயில் இதன் வேரை சிதைத்துப் போட்டுக்காய்ச்சி வடிகட்டி 15 மில்லி அளவு எடுக்க பேதியாகும். அத்துடன் இடுப்பு வலிக்கு வெளிப்பிரயோகமாக பூச வலி, பிடிப்பு தீரும்.


இதன் உலர்ந்த வேர்களை மசாலாப் பொடிகளில் சேர்க்கலாம். இதனால் உஷ்ணத்தை தணிக்கும் தன்மையுண்டு.


ஒற்றைத் தலைவலிக்கு இதன் வேர்களை சிதைத்து தேங்காய் எண்ணெயில் போட்டுக் காய்ச்சி 2-3 துளி மூக்கிலிட குணமாகும்.


பிரசவித்த பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பாசாய அழுக்குகளை நீக்குவதற்கும் கர்ப்பாசாயத்தை பலப்படுத்தவும் சாரணை- 5 கிராம், வெள்ளைப்பூண்டு-10 கிராம், இஞ்சி-5 கிராம் நன்றாகக் கழுவி அம்மியில் வைத்துப் பட்டுப்போல அரைத்து சிறு சிறு உருண்டையாக்கி பனங் கட்டியுடன் சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

பிரசவித்து 3 நாட்களிலிருந்து 7 நாட்கள் வரை தினமும் காலையில் கொடுக்க மேற்கூறிய பயனை அடைய முடியும்.

சிறுநீர்த்தாரையில் எரிச்சல், சிறுநீர் தொற்று இருந்தால் சுரைவிதை, நீர் முள்ளி, சாரணைவேர், நன்னாரி வேர் என்பன சமஎடை எடுத்து நான்கு பங்கு நீர் விட்டு கால் பங்காக சுண்டக் காய்ச்சி 30 மில்லி காலை, மாலை அருந்தக் கொடுக்கவும்.







# கொலைக்குற்றவாளிக்கு மன்னிப்பு ஜனாதிபதி ஊடகப்பிரிவு விளக்கம்

(கொழும்பு)

ராஜகிரிய, ரோயல் பார்க் கொலைச் சம்பவத்தின் குற்றவாளியாக ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த 34 வயதுடைய டொன் ஸ்ரமந்த ஜூட் ஜயமக என்பவருக்கு மனிதாபிமான அடிப்படையில் ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குமாறு மதத் தலைவர்கள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர் அணிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுத்து மூலமான கோரிக்கைகளையும் பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளனர்.

இவ் இளைஞருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவதற்காக தலைமை ஏற்று செயற்பட்ட பாராளு மன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் இவ் இளைஞரின் பெற்றோர்களையும் உறவினர்களையும் ஜனாதிபதியுடன் சந்திப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு இவ்விடயம் தொடர்பிலான விரிவான விளக்கமும் மேற்கொள்ளப்பட்டது. ரத்ன தேரரால் இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுத்துமூல கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதில் குறித்த சம்பவம் காதலர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினை என்றும் ஜூட் என்பவர் சிறைச்சாலையில் நன்னடத்தையுடன் செயற்பட்டதாகவும் சிறைச்சாலையில் இருந்தவாறே வெளிவாரி பட்டப் படிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்து தற்போது கலாநிதிப் பட்டப்படிப்புக்கு தேவையான கற்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் ஆளுமைத் திறன், அறிவுடன் கூடிய இவ் இளைஞருக்கு மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவது நியாயமானதும் மனிதாபிமான ரீதியிலான விடயம் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று புத்த பகவானின் போதனைகளுக்கமைய கருணையும் இரக்கத்துடனும் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் அத்துரலிய ரத்ன தேரர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்.

சங்கைக்குரிய பத்தேகம சமித்த தேரரும் இவ் இளைஞருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவது குறித்து வலியுறுத்தியதுடன், இவ் இளைஞர் சிறந்த பிரஜையாகவும் கல்விமானாகவும் எதிர்காலத்தில் செயற்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதை தன்னால் ஊகிக்க முடியுமென்றும் அதன் காரணத்தால் இரக்க மனதுடன், அந்த இளைஞனுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பில் பரிசீலித்து பார்க்குமாறும் வலியுறுத்தினார்.

கலாநிதி சங்கைக்குரிய கெரதேவல புண்ணிய ரத்தன நாயக்க தேரர் எழுத்து மூலமான கோரிக்கையினூடாக சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வரும் இளைஞர், குறிப்பிட்ட குற்றத்தை தவிர்த்து வேறு குற்றங்கள் புரியாததாலும் கல்வி கற்று, புனர்வாழ்வு பெற்று, சிறந்த பிரஜையாகுவதற்கான கனவு காணும் கல்வி கற்ற இளம் சிறைக் கைதிகள் தொடர்பில் ஜனாதிபதி கருணை உள்ளத்துடன் கவனம் செலுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

மேலும் சங்கைக்குரிய பலங்கொட புத்த கோஷ தேரரும் இவ்வாறான படித்த இளம் சிறைக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குவது முக்கியமான விடயம் என ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக வலியுறுத்தினார். தென் மாகாண கத்தோலிக்க ஆயர் ரேமன்ட் விக்கிரமசிங்க, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் இளம் புனர்வாழ்வுக்குட்பட்டுள்ள கற்ற சிறைக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படுவது சம்பந்தமாக அவர் தனது ஆசீர்வாதம் உள்ளதாக ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் தெரிவித்திருக்கின்றார்.

முன்னாள் உயர் நிதிமன்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்க ஜனாதிபதிக்கு இந்த வழக்கு சம்பந்தமாக விரிவாக விடயங்களை உள்ளடக்கிய கடிதமொன்றை அனுப்பி வைத்தார். இந்த ஸ்ரமந்த ஜூட் என்பவர் சிறைச்சாலையில் இருக்கின்றபோது லண்டன் பல்கலைக்கழகத்தில் பொருளியல் மற்றும் நிதி சம்பந்தமாக வெளிவாரிப் பட்டப் படிப்பை நிறைவு செய்து கலாநிதி பட்டப்படிப்புக்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பு கற்கை ஒன்றை தொடர்ந்து வருவதாகவும் அவரது கல்வி சம்பந்தமாக கருத்திற் கொண்டு அவர் சிறையில் கழித்திருக்கும் தண்டனைக் காலத்தையும் கருத்திற்கொண்டு அவருக்கு மன்னிப்பு வழங்குவது நியாயமானது எனத் தெரிவித்திருக்கிறார். மேலும் சட்டத்தரணி மகேஷ் மடவெல, சட்டத்தரணி நாலனி மனதுங்க, சட்டத்தரணி நில்ரூக் இகலகத்ரிகே, சட்டத்தரணி குமுது நாணயக்கார ஆகியோரும் காலி வெலிவத்த விஜயானந்த விகாரையின் விஜயானந்த சமூக சேவை அபிவிருத்தி மன்றம், உனவட்டுன ரூமஸ் ஸல நவஜீவன அமதியாப ஹண்ட ஆகிய சிவில் அமைப்புகளும் ஸ்ரமந்த ஜூட்டின் பெற்றோரும் மனிதாபிமான அடிப்படையில் அவரது நன்னடத்தையால் சுதந்திர பிரஜையாக எதிர்காலத்தில் சமூகத்திற்கும் நாட்டுக்கும் செய்யக்கூடிய நற்பணிகளையும் கருத்திற் கொண்டு அவருக்கு மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர்.

அதேபோன்று அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஓய்வு பெற்ற நீதியரசர்களைக் கொண்ட மூவர் அடங்கிய விசேட குழுவொன்றால் சிறைச்சாலையில் அந்த இளைஞனின் நன்னடத்தை காரணமாக அவருக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், இது சம்பந்தமாக நீதி அமைச்சின் மூலம் பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயரதிகாரிகளைக் கொண்ட விசேட குழுவொன்றின் மூலம் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளும் கருத்துக்களும் ஜனாதிபதியால் கருத்திற்கொள்ளப்பட்டது.

இந்த அனைத்து விடயங்களையும் கருத்திற்கொண்டு அந்த இளைஞனின் நடவடிக்கைகள் தொடர்பில் சிறைச்சாலை திணைக்களத் திடமிருந்தும் அறிக்கையைப் பெற்று ஏனைய சம்பந்தப்பட்ட அரச நிறுவனங் களின் மூலமும் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் கருத்துக்களையும் ஜனா திபதி கருத்திற் கொண்டு செயற்பட்டிருந் தார்.

இந்தக் குற்றம் இடம்பெற்ற 2005 ஆம் ஆண்டு ஸ்ரமந்த ஜூட் அந்தணி என்பவர் 19 வயது இளை ஞராக இருந்த தும் இந்த நிகழ்வு கொலை ஒன்றை மேற்கொள்ளும் எண்ணத்தில் இடம்பெற்ற ஒன்று அல்ல என்பதும், திடீர் கோபத்தின் அடியாக இடம்பெற்ற ஒன்று என்ற விடயத் தையும் குறித்த இளைஞர் சிறைச்சாலை யில் இருந்த சுமார் 15 வருட காலப் பகுதி யில் நற்செயல்களில் ஈடுபட்டு தனது உயர் கல்வி நடவடிக்கைகளையும் நிறைவு செய்து கலாநிதிபட்டப் படிப்பு வரை கல்வி பெற்றுக்கொள்வதற்கு பட்டப்பின் படிப்பு கல்வி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்ததும் அவர் கல்வி மற்றும் அனுபவங்களில் முதிர்ச்சியையும் பெற்று புனர்வாழ்வளிக்கப்பட்டிருப்பதும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த குற்றம் தவிர்ந்த வேறு எவ்விதமான குற்றங்களிலும் இத ற்கு முன்னர் ஈடுபடாத ஒருவர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் 34 வயது இளைஞரான அவருக்கு சிறந்த கற்ற ஒரு இளைஞராக நாட்டுக்கு சேவை செய்யக் கூடிய இயலுமையையும் உலகில் வேறு நாடுகளிலும் இவ்விதமாக சிறைக் கைதிகள் சம்பந்தமாக மனிதாபிமான அடிப்படையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதனையும் கருத்திற்கொண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஸ்ரமந்த ஜூட் என்பவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பை வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்தார் என அவரின் ஊடகப் பிரிவு நீண்ட விளக்கமளித்துள்ளது. (இ-7)

# மலரும் மொட்டு ஆட்சியில் நான்கு தமிழ் அமைச்சர்கள்



(காரைதீவு)

கிழக்கு மாகாண தமிழ் மக்களுக்கு மொட்டு அரசாங்கத் தின் வரப்பிரசாதமாக நான்கு தமிழ் அமைச்சர்கள் தரப்படுவார்கள் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கை வகுப்பாளரும் பொருளாதார அபிவிருத்தி முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காரைதீவு பிரதேச அமைப்பாளர் வீரகத்தி கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரித்து காரைதீவு விபுலானந்த கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பசில் மேலும் தெரிவிக்கையில்,

சகலரும் சம உரிமைகளுடனும் வாழக்கூடிய இன, மத பேதம் அற்ற ஆட்சியை நாம் இந்த நாட்டில் கொண்டு வரு வோம். எமது கடந்த அரசாங்கங் களில் கிழக்கு மாகாணத்தில் இருந்து இரண்டு தமிழ் எம்.பிக் கள் அங்கம் வகித்தார்கள். ஆனால் எமது புதிய அரசாங்கத்தில் கிழக்கு மாகாணத்தில் இரு ந்து நான்கு தமிழ் அமைச்சர்கள் இருப்பார்கள்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் உங்கள் பிரதேசங்களில் இடம் பெற்ற அபிவிருத்திகள் குறித்து உங்களுக்கு மிக நன்றாகவே தெரியும். அனைத்து வசதிகளும் உங்களுக்கு ஏற்படுத்தித் தரப்பட்டன.

இளையோர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. ஆனால் மகிந்த அரசாங்கத்தை விட சிறந்த முறை யில் செயற்படக்கூடிய அரசாங்கம் வரும் என்று நினைத்து 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில மகிந்தவை தோல்வியடை யச் செய்தீர்கள்.

ஆனால் அதன்பின் என்ன நடந்தது? விவசாயிகளுக்கான உரமானியம் நிறுத்தப்பட்டது. நீர்ப்பாசன வசதிகளும் இல்லாமல் செய்யப்பட்டன. விவசாயிக ளின் உற்பத்திகளுக்கு உரிய சந்தை வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அனைத்தும்கூட நிறுத்தப்பட்டன. இந்நிலைமைகளை மாற்றியமைக்க உங்களுக்கு தற்போது மிக நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. நீங்கள் மொட்டு சின்னத்துக்கு வாக்களித்து கோத்தபாயவை வெற்றி பெறச் செய்யுங்கள்.

அதன் பின் அவரின் தலைமையிலான புதிய அரசாங்கத்தை நாம் அமைப்போம். கிழக்கு மாகாணத்தில், அநேகமான பட்டதாரிகளும், படித்த இளை யோர், யுவதிகளும் வேலை வாய்ப்பின்றி இருக்கின்றனர். எமது அரசாங்கம் அமைக்கப்பட்டதும் அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் நிச்சயம் வழங்கப்படும். தற்போது ஒரு இலட்சத் துக்கும் கூடுதலான பதவி வெற்றிடங்கள் அரசாங்க தொழில் துறைகளில் உள்ளன. அவற்றுக்கு அவர்களை நியமிப்போம்.

மேலும் இன்று எத்தனையோ குடும்பப் பெண்கள் எதுவித வாழ் வாதாரங்களும் இன்றி குடும்பத் தைத் தனியாக சுமந்து கொண்டு கடன் சுமையில் தத்தளிக்கின்றனர். அவர்களின் மன வேதனை கள் எமக்கு நன்கு தெரியும். அவ் வாறானவர்களுக்கான நிவாரணத் திட்டம் ஒன்றை நாங்கள் கொண்டு வருவோம். அத்தோடு தற் போது சோபையிழந்து மங்கிக் காணப்படுகின்ற எமது இலங்கைத் திருநாட்டையும் மீளக் கட்டியமைத்து செழுமையடையச் செய்ய எம்மால் மாத்திரமே முடியும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 120 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | . 150 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 210 | 250 |
| தக்காளி | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 80 | 80 |
| கோவா | 140 | 140 | 110 | 160 |
| கரட் | 250 | 200 | 200 | 320 |
| பூசணி | 60 | 50 | 80 | 120 |
| புடோல் | 120 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 240 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 180 | 120 |
| பாகற்காய் | 250 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 30 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 150 | 120 | 130 | 160 |
| லீக்ஸ் | 250 | 280 | 140 | 320 |
| பீற்றூட் | 200 | 100 | 110 | 160 |
| கறிமிளகாய் | 300 | 200 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 350 | 320 |
| போஞ்சி | 120 | 140 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 140 | 140 | 100 | 120 |
| கீரை-1பிடி | 50 | 40 | 50 | 60 |
| தேசிக்காய் | 160 | 150 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 350 | 300 | 160 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 100 | 50 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 160 | 100 |

# விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு மேலும் ஐந்து ஆண்டுகள் தடை

## உயர் நீதிமன்றம் உறுதி

(டில்லி)

**தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு மேலும் ஐந்து ஆண்டுகள் தடை விதித்த மத்திய அரசின் உத்தரவை டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையிலான தீர்ப்பாயம் உறுதி செய்தது.**

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது. அதன்பின்னர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தத் தடை நீடிக்கப்பட்டு வந்தது.

அதற்கமைய கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி மத்திய உள்துறை அமைச்சகம் விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடித்து உத்தரவிட்டது. அதேநேரம் இந்த ஆண்டு மே மாதமும் மத்திய அரசு விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு மேலும் ஐந்து ஆண்டுகள் தடை விதித்து அறிவிப்பு வெளியிட்டது.

இந்த தடையை ஆய்வு செய்ய வேண்டும் என பல்வேறு தரப்பில் இருந்தும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு தடை விதிக்கப்பட்ட உத்தரவை தொடரலாமா? என்பது குறித்து ஆய்வு செய்ய டில்லி உயர்நீதிமன்ற நீதிபதி சங்கீதா பிந்த்ரா செகல் தலைமையில் ஒரு தீர்ப்பாயத்தை மே 27 ஆம் திகதி மத்திய அரசு அமைத்தது.

இந்த தீர்ப்பாயம் டில்லியிலும் சென்னையிலும் விசாரணைகளை மேற்கொண்டது.

இதில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளரான ம.தி.மு.க. தலைவர் வைகோ உள்ளிட்ட பலர் முன்னிலையாகி வாதிட்டனர். அதன் பின்னர் தீர்ப்பாயம் கடந்த 7ஆம் திகதி விடுதலைப்புலிகள் இயக்கம் மீது மத்திய அரசு மேலும் ஐந்து ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டதை உறுதி செய்வது என்ற முடிவுக்கு வந்ததாக டில்லி உயர் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் தீர்ப்பாயம் தனது உத்தரவை முத்திரையிட்ட கவரில் மத்திய அரசுக்கு அனுப்பியது. மத்திய அரசு இதனை விரைவில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)







நல்லூர் பாணன்குளம் நாச்சியம்பாள் ஆலய பாலஸ்தாபன விஞ்ஞாபனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சுபவேளையில் இடம்பெற்றது. இதில் அம்பாள் உட்பட அனைத்து விக்கிரகங்களுக்கும் அபிஷேகம் இடம்பெற்றது.



திருநெல்வேலி பேச்சியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் திங்கட்கிழமை அம்மன் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மணவறையில் வீதியுலா வந்து பத்தர்களுக்கு அருட்காட்சியளித்தார்.

## மாகாண மட்டத்தில் மாணவி முதலிடம்



(யாழ்ப்பாணம்)

மாகாண மட்டத்தில் கட்ந்த 9 ஆம் திகதி யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஆங்கில மொழிமூல விஞ்ஞான விநாடி வினாப் போட்டியில் யா/மக ஜனக் கல்லூரியில் தரம் 07 இல் கல்வி பயிலும் கணேசானந்தன் கனிமொழி முதலாமிடம் பெற்றார். (இ)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வழங்கும் வைபவம் கடந்த 6ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்ப பீட முன்னாள் பீடாதிபதி கணிதவியல் பேராசிரியர் எஸ்.ஸ்ரீசற்குணராஜா, யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் ஜி.மிகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வட்டுக்கோட்டை கிழக்கு தாவளை சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த 5 ஆம் திகதி அதிபர் திருமதி சி.சக்திநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக சங்கானை கோட்டக்கல்விப்பணிப்பாளர் நோபேட் உதயகுமார், லயன் எம்.தவக் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.







துன்னாலை வடக்கு மெ.மி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை அதிபர் சி.லிங்கனதாஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக விலங்கியல் துறைத் தலைவர் கலாநிதி சந்திரவதனி தேவதாசன் கலந்து கொண்டார்.

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள்.

- டால்ஸ்டாய்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களை சிங்கள மக்கள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை

ஜனாதிபதித் தேர்தல் என்பதைப் பார்க்கும் போது சிங்கள பேரினவாதத்துக்கு யார் தலைமை தாங்குவது என்பது போன்ற தேர்தலாகவே தென்பகுதி மக்கள் கருதுகின்றனர்.

அதாவது தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற எவரும் ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல முடியாது என்றளவுக்கு தென்பகுதி நிலைமையுள்ளது.

இவ்வாறான நிலைமைக்கு சிங்களப் பேரினவாதிகளின் விதைப்புகளே காரணமெனலாம்.

தமிழ் மக்கள் சிங்களவர்களின் எதிரிகள் என்பது போன்ற சித்திரிப்புகள் சிங்கள மக்களிடம் ஆழப்பதிந்து விட்டது.

இதனால் அவர்கள் தமிழ் மக்களை தங்களின் எதிரிகளாகவே பார்க்கின்றனர்.

இதன்காரணமாக தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதைக்கூட தமிழ் மக்களுக்கு அதிகமாக வழங்கப்படுகிறது என்ற கோணத்தில் பார்க்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகிவிட்டது.

உண்மையில் சிங்களத் தரப்பினால் மிகப் பெரும் உயிரிழப்புகளையும் சொத்து இழப்புகளையும் சந்தித்தவர்கள் தமிழர்கள்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக சிங்கள மக்கள் இரங்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோசத்தை சிங்கள மக்களே எழுப்ப வேண்டும்.

ஆனால் அவ்வாறான தர்மம் எதுவும் தென்பகுதியில் தென்படவில்லை.

மாறாக சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் தமிழர்கள். அவர்களுக்கு உரிமை வழங்குவது இந்த நாட்டை இரண்டாகப் பிரிக்கும். பௌத்த சிங்களத்துக்கு ஆபத்தைத் தரும் என்ற கருத்து நிலையே தென்பகுதியில் காணப்படுகிறது.

இதன்காரணமாக இலங்கை மண்ணில் இன ஒற்றுமை என்பது இன்னமும் சாத்தியப்படாத விடயமாகவே இருந்து வருகிறது.

கடந்த 30 ஆண்டு கால யுத்தத்தால் ஏற்பட்ட இழப்புகள் தமிழினத்தை அதலபாதாளத்தில் தள்ளிவிட்டுள்ளது.

தமிழ் மக்களின் வாழ்வியல் பின்தங்கியுள்ளமையும் கல்வி நிலை வீழ்ச்சி கண்டுள்ளமையும் அடிப்படை வசதிகள் அற்ற நில்லமையும் தமிழினத்தை தகிக்க வைக்கிறது.

இருந்தும் தமிழினத்தின் வீழ்ச்சியைப் புறந்தள்ளி இலங்கையில் அபிவிருத்தியை ஏற்படுத்துகின்ற முயற்சியில் சிங்களத் தரப்புகள் முனைப்புக் காட்டி வருகின்றன.

ஒரு நாட்டுக்குள் ஓர் இனம் பொருளாதாரத்தில் பின்தங்கி நிற்கின்ற நிலையில் – அடிமைப்பட்டிருக்கின்ற நிலையில், அதுபற்றிச் சிந்திக்காமல் நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முற்படுகின்ற மடமைத்தனத்துக்குள் இருக்கின்ற இனவாதம் எத்துணை கொடியது என்பதை உணர்வது கடினமன்று.

எதுஎவ்வாறாயினும் இந்த நாட்டின் எழுச்சி என்பது தமிழ் இனத்தின் எழுச்சியில் தங்கியுள்ளதென்ற உண்மையை தென்பகுதி மக்கள் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

### வாக்குகள் குறைந்துவிடும் என்ற அச்சத்தில்

# மகிந்த வடக்கில் ஒன்றையும் தெற்கில் ஒன்றையும் சொல்கிறார்

## கிளிநொச்சியில் அநுரகுமார திசாநாயக்க

(கிளிநொச்சி)

வாக்குகள் குறைந்துவிடும் என்ற அச்சத்தில் மகிந்த வடக்கில் ஒன்றையும் தெற்கில் ஒன்றையும் சொல்லி வருகிறார் என ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க கிளிநொச்சியில் வைத்து தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார கூட்டம் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

குறித்த கூட்டம் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

71 வருட அரசியல் எமக்கு என்னத்தை கொடுத்தது. ஒன்றும் இல்லை.

எமது பிள்ளைகளிற்கு சரியான கல்வியை கூட பெற்றுக் கொடுக்க முடியாத நிலை காணப்பட்டது. பிள்ளைகள் இருந்தால் ஆசிரியர் இல்லை. ஆசிரியர் இருந்தால் கட்டடங்கள் இல்லை. கட்டடங்கள் இருந்தால் கரும்பலகை இல்லை. இவ்வாறே எமது பிள்ளைகளின் கல்வி நிலை காணப் பட்டது

ஆனால் அரசியல்வாதிக ளின் பிள்ளைகள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்த பாடசாலைகளிலும் வெளிநாடுகளிலும் தமது கல்வியினை பெறுகின்றனர்.

எமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய தரமான வைத்தியசாலைகள் கூட இல்லை. ஆனால் அரசியல்வாதிகளும், அவர்களின் குடும்பமும் வெளிநாடுகளில் சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறான நிலைகளை நாங்கள் மாற்றுவதற்கே அழைப்பு விடுக்கின்றோம். எமது அடிப்படை தேவைகளில் ஒன்று வீடு. ஆனால் மழைநீர் உட்புகாத வீடுகள் எமக்கு கிடைத்துவிட்டதா என்றால் இல்லை.

ஆனால் அரசியல்வாதிகள் தொழிலிற்காக கொழும்பில் ஒரு வீட்டையும், வெயில் காலத்தில் நுவரெலியாவில் இருப்பதற்கு வீட்டையும், லண்டன் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் தமக்கென வீடுகளையும் வைத்திருக்கின்றார்கள்.

ஆனால் எமக்கு மழைநீர் உட்புகாத வீட்டை பெறுவதற்கு சிரமமாக உள்ளது.

வடக்கு கிழக்கை பொறுத்தமட்டில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் அரசியல் கைதிகள் ஆகிய இரண்டு விடயத்திற்கும் நாங்கள் பதில் அளிக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

அதற்காகவும் நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம். இதற்கு உரியவர்கள் கட்டாயம் பதில் அளித்தே ஆக வேண்டும். மகிந்த தெற்கில் ஒன்றையும் வடக்கில் ஒன்றையும் சொல்லி வருகின்றார். சஜித் இரு பிரதேசங்களில் ஒன்றையும் சொல்கின்றார் இல்லை.

ஏன்? சிங்கள மக்களின் வாக்குகள் குறைந்து விடும் என்ற அச்சத்திலா, இவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர்.

இந்திய படையினராலும் வடக்கில் பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறான தாக்குதலால் தமிழ் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த காலப் பகுதியில் பல வீடுகள் சேதமாக்கப்பட்டிருந்தன.

அந்த காலப்பகுதியில் அப்பகுதிக்கு சென்று அவ்வாறு பாதிக்கப்பட்டு சேதமடைந்த பல வீடுகளை நான் பார் வையிட்டிருந்தேன். எமது சமூகம் இந்திய கலையினை அதிகம் பார்க்கின்றனர்.

இந்திய தொலைக்காட்சி, இந்திய பாடல்கள், இந்திய திரைப்படங்களிற்கு அதிகம் முன்னுரிமை அளித்துள்ளனர். இவ்வாறான நிலையில் மாற்றம் வேண்டும்.

இலங்கையில் பாடல்கள், திரைப்படங்கள் என இலங்கை கலைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டபோது சஜித் பிரேமதாசா ஏதாவது கதைத்திருக் கின்றாரா? இல்லை. அவர் மௌனமாகவே இருந்திருக்கின்றார்.

எனவே இவ்வாறானவர்களிற்கு எதிராக நல்லதொரு ஆட்சி அமைப்பதற்கு நாங்கள் உங்களிற்கு அழைப்பு விடுக்கின்றோம்.

இலங்கை ஒரு இன தேசிய நாடு அல்ல. இது பல்வேறு இனங்களை கொண்ட நாடு. அனைவருக்கும் சம உரிமை உண்டு. எனவே மொழி, மதம், கலாச்சாரம் என்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி அனைவருக்கும் சம உரிமையினை வழங்குவதற்கு வரும் 16ம் திகதி தமக்கு வாக்களிக்குமாறு அவர் தெரிவித்தார். (ம-3.100.350)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடம் மற்றும் பொருளியற்றுறை இளம் பொருளியலாளர் மன்றத்தின் கலந்துரையாடல் இன்று 13 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணிவரை பொருளியற்றுறை விரிவுரை மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள அவசர நிலையம் நிலைபேறான நிலையை விரைந்து அடைய வேண்டும் என்கிற சவாலும் என்ற தலைப்பில் வடக்கு- கிழக்கு மாகாண இயற்கை வழிச்செயற்பாட்டாளர் வைத்தியர் ந.பிரபு கருத்துரை வழங்குவார். (இ-7)

### வாழ்வைப் பொன்னாக்கும் வைரவரிகள்

செருக்கு தேவர்களை அசுரர்களாக மாற்றுவது. அடக்கம் மனிதர்களை தேவர்களாக மாற்றுவது - அகஸ்டின்

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர் கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்" - *தியோடர் ரூஸ்வெல்ற்*
*(அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)*

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** செட்டிக்குளம் நகர பிரதேசம், கந்தசாமி நகர், நித்திக்குளம், சண்முகபுரம், கங்கன்குளம், செட்டிக்குளம் வைத்தியசாலை, செட்டிக்குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், செட்டிக்குளம் தொலைத்தொடர்பு, புளியங்குளம், காந்திநகர், அரசடிக்குளம், ஆகிய இடங்களிலும், **மன்னார் பிரதேசத்தில்** மாந்தை, திருக்கேதீச்சரம், நாகத்தாழ்வு, தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், பாலியாறு, மூன்றாம்பிட்டி, தேத்தாவடி, அந்தோனியர்புரம், இலுப்பைக்கடவை, கள்ளியடி, விடத்தற்தீவு, பள்ளமடு, கோவில்குளம், கூராய், அகத்திமோட்டை, சேதுவிநாயகன்குளம், நெடுங்கண்டல், பாப்பாமோட்டை, மினுக்கன் ஆகிய பிரதேசங்களிலும மின் தடைப்படும்.

## ஆன்மீகச் சிந்தனைகள்

### வழிபாட்டில் உயர்ந்தது எது?

✦ உண்ணாமல் இருக்கலாம், உறங்காமல் இருக்கலாம். ஆனால் கடவுள் சிந்தனை இல்லாமல் இருக்கக் கூடாது.

✦ கடவுள் இல்லை என்பவனுக்கு அனைத்தும் இல்லாமல் போய்விடும். கடவுள் உண்டு என்பவனுக்கு அனைத்து பொருட்களும் கிடைக்கும்.

✦ அறிவையும், அன்பையும் கெடுக்கக்கூடிய ஆகாரத்தை சாப்பிடுவதை விட, தூய உணவை சாப்பிட்டு, தூய குணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

✦ உலகம் நிலையற்றது. தர்மம் நிலையானது. தர்மத்தால் தான் நற்கதியடைய முடியும். தர்மம் இறைவனுடைய மூத்த மகன்.

✦ இறைவனுடைய கருணையைப் பெறத்துடிக்கும், ஒவ்வொருவரும் பிற உயிர்களிடம் கருணை காட்ட வேண்டும்.

✦ உடம்பும் நாமும் வேறு, வேறு. ஆனால் சிவமும் சக்தியும் அப்படியல்ல. மலரும் மணமும் போன்று இணைந்திருப்பது.

# ஆனந்தசுதாகரின் குடும்பத்தினரை சந்தித்தார் தயாசிறி ஜயசேகர



(முறிகண்டி)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் நேற்று அரசியல் கைதியான ஆனந்தசுதாகரின் குடும்பத்தினரை சந்தித்தனர்.

நேற்று இரவு 8.30 மணியளவில் கிளி நொச்சி மருதநகர் பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்திற்கு சென்று ஆனந்தசுதா கரனின் பிள்ளைகள் மற்றும் உறவினர் களுடன் கலந்துரையாடினர்.

ஆனந்த சுதாகரின் குடும்பத்தின் நிலையை நேரில் கேட்டறிந்து கொண்ட அவர்கள் நீண்ட நேரம் அவர்களுடன் உரையாடினர். தொடர்நது தயாசிறி ஜயசேகர ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவிக்கையில்,

ஆனந்தசுதாகர் தமக்கு கிடைத்த தண்டனை தொடர்பில் மேல் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார். அதனால் ஜனாதிபதியினால் பொது மன்னிப்பளித்து விடுதலை செய்ய முடியாத நிலை காணப்பட்டுள்ளது. ஆனந்தசுதாகர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு மீளப்பெறப்பட்டிருந்தால் அவரை விடுதலை செய்திருக்க முடியும்.

அதனால்தான் அவரது விடுதலை தாமதமாகியுள்ளது. அடுத்த அரசாங்கத்தில் கோத்தபாய ராஜபக்ஷ பொறுப்பேற்றதன் பின்னர் அரசியல் பேதமின்றி இவ்விடயம் தொடர்பில் நல்லதொரு முடிவு எட்டப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.(ம-3,10,100,271)

# காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி வந்த

## இரு தந்தையர் மரணம்

(முல்லைத்தீவு)

காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி தொடர்ந்து போராடி வந்த தந்தையர் இருவர் மரணமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த இரண்டு தந்தையர்களே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

முள்ளியவளை நாவற்காடுப் பகுதியைச் சேர்ந்த இரண்டு மாவீரர்களின் தந்தையான வெள்ளையன் அழகன் (வயது - 69) என்பவர் கடந்த திங்கட்கிழமை திடீர் மரணமடைந்துள்ளார்.

இவரது மகளான அழகன் கலைச்செல்வி முள்ளிவாய்க்காலில் படையினரின் கட்டுப்பாட்டில் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டார். தனது காணாமல் ஆக்கப்பட்ட மகளைத் தேடி போராடி வந்த நிலையில் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த நிலையிலேயே திடீர் மரணமடைந்துள்ளார்.

அதேவேளை நேற்று முன்தினம் 3ஆம் வட்டாரம், முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த, ஒரு மாவீரரின் தந்தையான பரமசாமி





சிறீஸ்கந்தராசா என்பவர் மாரடைப்புக் காரணமாக மரணமடைந்துள்ளார்.

இவரது மகனான சிறீஸ்கந்தராசா யுகேன் என்பவர் இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்துக் காணாமல் ஆக்கப்பட் டிருந்தார்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுவந்த சிறீஸ்கந்தராசா இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக இடம் பெற்று வரும் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோ ரது போராட்டத்தில், இதுவரை 55ற்கும் மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட் டோரது பெற்றோர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,9)

# கோத்தாவின் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட 4 ஆளுநர்களை நீக்குக

## மகிந்த தேசப்பிரிய மைத்திரிக்கு கடிதம்

கோத்தபாய ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளிற்கு ஒத்துழைப்பு வழங்கி·செயற்படும் நான்கு ஆளுநர்களை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய.

இது குறித்து நேற்றுமுன்தினம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கோத்தபாயவின் தேர்தல் பிரசாரத்தில் நான்கு ஆளுநர்கள் பகிரங்கமாக செயற்படுவதாக தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளால், மகிந்த தேசப்பிரியவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்தே ஜனாதிபதியிடம் இது குறித்து கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை குறிப்பிட்ட நான்கு ஆளுநர்களிற்கும் தேர்தல் ஆணைக்குழு தகவல் அளித்துள்ளது. (ம-3)


வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை



வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் உணவகம் ஒன்றுக்கு உணவு பரிமாறுபவர் தேவை.

வயதெல்லை:- 20 - 40

தொடர்பு (949)

076 878 3734


# குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கினால் நீதிமன்றங்கள் எதற்கு

## ஹிருணிகா கேள்வி



குற்றவாளிகளுக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்க முடியுமாக இருந்தால், நீதிமன்றங்கள் எதற்காக நாட்டில் இருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "றோயல் பார்க் கொலையின் பிரதான குற்றவாளிக்கு ஜனாதிபதி அண்மையில், பொது மன்னிப்பு வழங்கியதையிட்டு நாம் மிகவும் கவலையடைகிறோம்.

இது முற்றுமுழுதாக ஜனாதிபதியின் தனிப்பட்ட நோக்கமே அன்றி, அமைச்சரவையினதோ அல்லது அரசாங்கத்தினதோ தீர்மானம் அல்ல.

இப்போதுள்ள ஜனாதிபதி பிரசார மேடைகளில் கலந்துகொள்ளாவிட்டாலும், அவர் கோத்தபாய ராஜபக்ஷவுக்குத்தான் ஆதரவாக செயற்படுகிறார்.

இப்படியான ஒருவர் துமிந்த சில்வாவையும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய மாட்டார் என்று என்ன நிச்சயம் உள்ளது?

குற்றவாளியொருவருக்கு பொது மன்னிப்பு வழங்க முடியும் என்றால் நீதிமன்றங்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள் எல்லாம் எதற்காக இருக்க வேண்டும்?

இன்றும் இரண்டு - மூன்று நாட்களில் நாட்டு மக்கள் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்கள். மக்கள் அனைவரும் சஜித் பிரேமதாஸவைத் தான் விரும்பிக் கொண்டிருக்கிறார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)


விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK-550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg

0768226240

V2 TRAVELS

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி



Study in ITALY

ஐரோப்பாவில் குடியேறுவதற்கு் ஓர் அரிய வாய்ப்பு

Why Study in ITALY ?

Admission open for 2020 Intake



- Bachelors & Master Degree
- Study in English Medium
- Scholarship up to 5,200 Euro
- No IELTS / TOFEL
- கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
- கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
- 100% விசா உத்தரவாதம்.
- குறைந்த பாட நெறி கட்டணம்

Schengen visa

(C-8207)

Limited Seats Available

iCS Study Abroad

Admissions :- 077 301 3060

77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்) 021 492 6222

107 B 1/1 , Galle Road , Colombo 6


# மரண அறிவித்தல்

## கந்தையா சின்னத்துரை

(ஓய்வுநிலை உத்தியோகத்தர் - தேசிய சேமிப்பு வங்கி)



பிறப்பு 18.01.1960

இறப்பு 10.11.2019

துன்னாலை தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்துரை கடந்த 10.11.2019 ஞாயிற்றுக் கிழமை பி.ப 1.30 மணியளவில் மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் தங்கமலரின் பாசமிகு கணவரும் விஜிதா, யசோதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்திரன் (ஆசிரியர்), மகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஜனாளினி, மிதுசன், சயந்தினி, டிலைக்ஷன், ரணிசா ஆகியோரின் பாசத்துக்கும் மதிப்புக்கும் உரிய பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2019) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிட்டிதூ இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 0779543956

(C-8206)

தகவல்:- மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கோத்தாவிடம் மண்டியிட்டு பிச்சை எடுக்க...

எமது மக்கள் நாட்டின் எதிர் காலத்தையும் பாதிக்காமல் செயற்படக்கூடியவரையே ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய வேண்டும். மாறாக ஒரு சர்வாதிகாரியை அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

திருகோணமலை கலாச்சார மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பலர் எதை தெரிவித்தாலும் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அர்ப்பணிப்புடன் பல தசாப்தங்களாக அயராது செயற்பட்டு வருகிறோம். எதிர்காலத்திலும் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய ஒருவரையே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யவேண்டும்.

தற்போது போட்டியிடுபவர்களில் சஜித் பிரேமதாச ஒருமித்த நாட்டிற்குள் உச்சபட்ச அதிகாரப் பகிர்வுடனான அரசியலமைப்பு மாற்றத்தைக் கொண்டு வருவேன் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

ஆனால் கோத்தபாய முற்றிலும் சிங்கள மக்களின் வாக்குகளினாலேயே வெல்வேன் என கூறி வருகிறார். இந்த நிலைப்பாடு தமிழ் மக்களின் நீண்டநாள் போராட்டத்திற்கு தீர்வைத் தராதது மட்டும் அல்லாது இந்த நாட்டிற்கும் பொருந்தாதது.

கோத்தபாய கடந்த காலங்களில் ஒரு சர்வாதிகாரியாக செயற்பட்டு எமது மக்களுக்கு அழிவுகளை ஏற்படுத்தினார். நாம் நீண்ட காலமாக போராட்டம் நடத்தி வருவது எமது உரிமைக்காக. அதனை விடுத்து அவரிடம் மண்டியிட்டு பிச்சை எடுக்க முடியாது.

மூதூரில் நடந்த 17 பணியாளர்களின் படுகொலைக்கு யார் பொறுப்பு. அதற்கு வழங்கப்பட்ட தீர்வு என்ன. திருகோணமலையில் நடந்த 5 மாணவர்கள் படுகொலை யாரின் காலத்தில் நடந்தது, அதற்கு இவர்கள் வழங்கிய தீர்வு என்ன.

இந்நிலையில் சின்னப்பொடியனான நாமல் கிராமம் தோறும் சென்று வாக்கு கேட்கின்றார்.

ஆதலினால் இவ்விடயங்களை கருத்தில் கொண்டு எமது பிரச்சினைகளை சுதந்திரமாக பேசவல்ல சஜித்திற்கு 95 வீதமான தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும். நீங்கள் நிராகரிக்க நினைக்கும் ஒரு வாக்கும் அது கோத்தாவிற்கே சேரும் என்றார். (ம-3)

# ராஜபக்ஷ என்றால் வடக்கில்...

பிறந்த பூமி அதனால் இங்குள்ள மக்கள் கௌரவமாக வாழ்ந்த மக்கள். யுத்தத்தால் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்ட மக்கள். துன்பத்தையும், துயரத்தையும், கண்ணீரையும், தெரிந்த மக்கள்.

சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எந்த வேறுபாடுகளும் இருக்க தேவை இல்லை. நாங்கள் எல்லோரும் ஒரு தாய் மக்கள். கடந்த 70 வருட காலத்தில் 26 வருடம் யுத்தத்திற்கு இருவரும் முகம் கொடுத்தோம்.

யுத்தத்தால் நீங்களும் வேதனைப்பட்டீகள் நாங்களும் வேதனைப்பட்டோம். எங்களுடைய சகோதரர்களும் மரணித்தார்கள் உங்களுடைய சகோதரர்களும் மரணித்தார்கள்.

அந்த துன்பகரமான வரலாற்றை நான் மீண்டும் ஞாபகப்படுத்த தேவையில்லை. தெற்கின் அரசியல்வாதிகளும் வடக்கின் அரசியல்வாதிகளினால்தான் வடக்கின் யுத்தம் ஏற்பட்டது. அதேபோல தென்பகுதியில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். இவை எல்லாவற்றிற்கும் அரசியல் பின்புலமாக இருந்தது.

சஜித் பிரேமதாச தான் ஜனாதிபதியானால் ஒவ்வொரு வீடுகளிலும் மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்களா என இரவு நேரம் சென்று பார்ப்பதாக கூறுகின்றார்.

ஆனால் ஜனாதிபதி ஒருவரால் அவ்வாறு செய்ய முடியாது வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் உள்ள வீடுகளில் இரவு நேரங்களில் போய் கதவை தட்டினால் பேய் எனச்சொல்லி பயப்படுவார்கள்.

ராஜப்க்ஷ என்றால் வடக்கில் தமிழர்களுக்கு ஒரு பயப்பீதி ஏற்படுகின்றது.

நீங்கள் ஞாபகப்படுத்தி பார்க்க வேண்டும் 2010 இல் இருந்து 2015 வரை இந்த வட மாகாணத்தின் அபிவிருத்தி பற்றி சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த அபிவிருத்தி இன்னும் ஐந்து வருடம் நிலைத்திருந்தால் இந்த நாடே பெரும் அபிவிருத்தி கண்டிருக்கும்.

வடக்கிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து பேச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேவையில்லை. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சிறுபான்மையினராகிய உங்களுக்காக பேசும் என்பதை கட்சியின் பொதுச்செயலாளர் என்ற வகையில் பகிரங்கமாக கூறிக் கொள்கிறேன். (ம-3)

# படகின் கம்பி குத்தியதில்...

பவம் ஒன்று நேற்று செவ்வாய்க் கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் கொக்குப்படையான் கிராமத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தந்தையான றெஜினோல்ட் (வயது-28) ஆவார். குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

முத்தரிப்புத்துறையைச் சேர்ந்த மீனவர்களின் படகு இயந்திரம் கடலில் பழுதடைந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த படகின் வெளி இணைப்பு இயந்திரத்தை திருத்தி அவர்களுக்கு உதவி செய்யும் முகமாக குறித்த குடும்பஸ்தர் கடலில் சென்று குறித்த வெளி இணைப்பு இயந்திரத்தை திருத்தியுள்ளார்.

இதன் போது குறித்த வெளி இணைப்பு இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறு காரணமாக அதிக குதிரை விசை கொண்ட எஞ்சின் என்பதால் ஸ்ராட் எடுக்கும் பகுதியில் உள்ள ப்ளைவீல் உடைந்து கூரிய தகடு பாய்ந்து கை மற்றும் கழுத்துப்பகுதியில் வெட்டப்பட்ட நிலையில் குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த குறித்த குடும்பஸ்தரின் சடலம் மன்னார் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரனைகளை மன்னார் பொது வைத்தியசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,285)

# வடக்கு - தமிழ்...

மாகாணத்திற்கும் தமிழ் நாட்டுக்கும் இடையிலும் புரிந்துணர் வையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு வடமாகாண ஆளுநர் என்ற ரீதியில் தனக்கு இருப்பதாக குறிப்பிட்டார். இதற்கான ஒரு படியாகவே தி.மு.கவின் தலைவரும் தமிழ்நாட்டு சட்டசபையின் எதிர்க்கட்சி தலைவருமான மு.க.ஸ்ராலின் அவர்களை சந்தித்ததாக மேலும் தெரிவித்தார்.

இதேவேளை 41 வருடங்களுக்கு பின்னர் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் இந்தியாவின் சென்னைக்கான பயணிகள் விமான சேவையும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வடமாகாணத்தில் சுற்றுலாத்துறையினை முன்னேற்றுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார். (ம-3)

# கிளிநொச்சி...

மீட்கப்பட்டுள்ளன. குறித்த குழுவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து அப்பகுதியில் சோதனை மேற்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதிகள் மற்றும் கைதானவர்களை குறித்த குழுவினர் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (ம-3,100)

# கிளிநொச்சியில்...

குடும்பஸ்தர் ஸ்தலத்திலே உயிரிழந்துள்ளார்.

பரந்தனிலிருந்து முறிப்பு பகுதியில் அமைந்துள்ள சகோதரியின் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த கப்ரக வாகனத்துடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-3.100)

# துப்பாக்கிச் சூடு...

பிச் செல்ல முற்பட்ட ஹெரோயின் வியாபாரியை நோக்கி பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுள்ளனர்.

இதன்போதே குறித்த ஹெரோயின் வியாபாரி உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

# வெள்ளைவான்...

தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கின்றார். அதாவது, தேர்தல் விஞ்ஞாபனத்தின் 44 ஆவது பக்கத்தில் அனைத்து வீடுகளுக்கும் இறைச்சிக்கடை ஆரம்பித்து அதனை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அவரின் இந்த நடவடிக்கையானது, கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியானாலும் அவரது வெள்ளை வான் கலாசாரத்தை கைவிடமாட்டார். இறைச்சிக்கடைக்கும் வெள்ளை வானுக்கும் என்ன வித்தியாசம் இருக்கின்றது என்று கேட்கின்றேன் என்றார். (ம-3)

# கூட்டமைப்பு...

மாத்திரம் செய்தனர் என முன்னாள் பொருளாதார அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா மக்கள் இளைஞர் முன்னணி தலைவர் ரீ.ஹரிபிரதாபின் ஏற்பாட்டில் கல்முனையில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஸவிற்கு ஆதரவாக பிரசார கூட்டம் அ.நிமலன் மற்றும் ஜெ.சி. கிஷாந்தன், ஆர்.சி.றஜீவகுமார் தலைமையில் இடம்பெற்ற போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

# பயங்கரவாத...

யும் செய்யமாட்டேன்.

யாருடைய பேச்சுக்கும் செவி சாய்த்து, பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தும் சட்டங்களில் மோசமான மாற்றங்களைச் செய்யமாட்டேன்.

வேட்புமனுவை ஏற்றுக்கொள்ளும் போது, நான் எந்த நிபந்தனைகளுக்கும் இணங்கவில்லை. நான் யாருடைய நிபந்தனைகளுக்கு இணங்குகின்ற நபர் அல்ல.

இலங்கை செய்து கொண்ட எல்லா சர்வதேச உடன்பாடுகளும் மீளாய்வு செய்யப்படும்.

சம்பந்தப்பட்ட நாடுகளுடன் கலந்துரையாடிய பின்னர், அவற்றில் மாற்றங்கள் செய்ய முடியும் என்று நம்புகிறேன் எனவும் அவர் தெரிவித்தார். (ம-3)

# தென்னிலங்கை...

நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

விசேடமாக இன்றைய தினம் காலி, மாளிகாவத்தை மற்றும் தர்கா நகர் ஆகிய பிரதேசங்களில் இடம்பெறும் மக்கள் கூட்டங்கள் தொடர்பில் பாதுகாப்புப் பிரிவு தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

காலி மற்றும் மாளிகாவத்தை பிரதேசங்களில் சஜித் பிரேமதாசவின் பிரசார நடவடிக்கை இடம்பெறவுள்ள நிலையில், தர்கா நகரத்தில் அநுரகுமார திஸாநாயக்கவின் பிரசார நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழும் இந்த பிரதேசத்தினுள் இன்றைய தினம் இனவாத தரப்பினால் குழப்ப நிலையை ஏற்படுத்துவதற்கான ஆபத்து காணப்படுவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனைத் தடுக்க தீவிர பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள பாதுகாப்புத் தரப்பினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ம-3)

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 790
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.11.12
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 63,633,360/-
வெற்றி இலக்கங்கள் 01 25 38 42 F
அபிவிருத்தி லொத்தர் சபை

கப்ருக
சீட்டிழுப்பு வாரம் 520
இளம்சிவப்பு
12/11 2019
செவ்வாய்க்கிழமை
D 32 62 66 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,945,665
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1620
சீட்டிழுப்பு திகதி 12/11/2019
வெற்றி இலக்கங்கள் 05 15 32 45 U
அடுத்த வியாழக் கிழமைக்கான ஜக்பொட் ரூ. 40,719,176
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 12/11/2019
வெற்றி வாரம் 2676
வர்ணம் சிகப்பு
துலாம்
வெற்றி இலக்கங்கள் 03 05 38 55
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,300,780
2019/11/13 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 12-11-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2299
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 08 33 65 80
தேசிய லொத்தர் சபை

செவண
திகதி 12/11/2019
சீட்டிழுப்பு இலக்கம் 235
R 06 16 56 58
NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2019/11/12
சீட்டிழுப்பு இலக்கம் 4048
U 9 0 4 5 3 8
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/11/12
சீட்டிழுப்பு இலக்கம் 623
லக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 05 11 34 64




இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.